மாற்றங்களை வேண்டி...

# பயில்நிலம்



30/=

ஆடி - மார்கழி 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பயில்நிலத்திற்கு வழிகாட்டியாய் இருந்து
நம்மை விட்டுப் பிரிந்த மாவை வரோதயனின்
நினைவாக....

பாட்டில் நானோர் விதையாய் விழுந்தென்
பாட்டில் முளைக்கும் பயிராவேன்
தீட்டித் துய்க்கும் கவிதை மரபில்
தீரத்துடனே கவியா வேன்!
வேட்டில் வீழ்ந்தும் புதிதாய் உயிர்த்தென்
வீச்சில் எழுச்சிக் குரலாவேன்!
காட்டில் வேகும் கணம்வந் தமைந்தால்
காலத் தொளியின் குறியாவேன்!

'நான்' எனும் நான்
மாவை. வரோதயனின்
இன்னமும் வாழ்வேன் கவிதைத் தொகுப்பில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களை வேண்டி...

பயில்நிலம்
அரையாண்டிதழ்

பயில்நிலம் குழு:
ப.கிரிகரன்
வ.சரண்யா
தி.ராகவன்
வ.பவித்ரா
ப.கௌரி
ம.மிதுன் ராகுல்

பக்கவடிவமைப்பு:
செ.நந்தமோகன்

அட்டைப்படம்:
ப.கிரிகரன்

ஓவியம்:
யோ.மஞ்சுவாணி

அச்சுப்பதிப்பு:
வேள்ட் விசன் கிறாபிக்ஸ்

வெளியிடுவோர்:

பயில்நிலம்
571/15, காலி வீதி,
கொழும்பு 06.

மின்னஞ்சல்:
payilnilam@gmail.com

# இதழில்...

**கட்டுரை**

தொலைக்காட்சிப் போட்டி நிகழ்ச்சிகள்...
-வரதா
நிரப்பப்படாத வாக்குப்பெட்டிகள்
-தீரா
மைக்கேல் ஜாக்சன்...
-ப.கிரிகரன்
பன்றிக்காய்ச்சல்...
-யோ.மஞ்சுவாணி

**கவிதை**

பொம்மர் வரும் பொழுது
-ஜெ.தனுஷா
வடுக்கள்
-S.சுஜாதா

**பத்தி**

மத்தியஸ்தசபை
-வ.பவித்திரா
இஸ்லாம்
-தி.ராகவன்
அண்டப்பெருவெளியில்
-வானவரம்பன்
சுயஆளுமை பற்றிச் சில நிமிடங்கள
-வ.சரண்யா

**கதை**

முள்வேலிகளுக்குப் பின்னே
-வாசு
ஆற்றோரமாய் ஒரு சோடி செருப்புக்கள்
-பகலவன்
கண்டவன் நிண்டவன்
-ச.சுதாகர்
விசித்திர மனிதன்
-இளமாறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களை வேண்டி...

# பயில்நிலம்

விதைப்பு-02
அறுவடை-03

ஆடி – மார்கழி 2009

## அவர்கள் வழங்கவுள்ள

## அமைதி வரும் போது.......

போரின் பின்னரான அமைதி குறித்துப் பலரும் சிலாகித்துப் பேசினாலும், அமைதி பற்றிய அச்சம் முன்பை விட இறுக்கமாக மனங்களில் குடிகொண்டிருக்கிறது என்பது என்னவோ உண்மைதான். பேச்சுக்கள் ஆறுதல் அளிப்பதற்குப் பதிலாக அச்சந்தருவனவாய அமைந்துவிட்ட சோகத்தை யாரிடம் போய்ச் சொல்வது.

அகதி முகாம்களும், நலிந்த முகங்களும் தன்னார்வ நிறுவனங் களின் பைகளை நிரப்பும் நல்லதோர் பிச்சைப்பாத்திரம். ஒரு மனிதப பேரவலம் சில மனிதர்களின பைகளை நிரப்பப் பலரது மனங்களில வெறுமை நிறைகிறது. ஒரு வகையில் இது இன்னொரு சுனாமி.

யார் யாரோ வந்து ஏதேதோ சொல்லிப் போய்விட்ட பின்னா லும் மக்கள் மட்டும் தொடர்ந்தும் அகதிகளாய், ஏதிலிகளாய் வெறுமை நிறையும் வாழ்க்கை.

யாரைத்தான் நம்புவது, எதைச் செய்வது, யாரிடம் கேட்பது... கேள்விகள் மட்டும் விடைகள் எதுவுமின்றி தொடர்ந்தும் அச்சுறுத்திக் கொண்டே இருக்கின்றன. சோகங்கள் மட்டும் மனங்களை நிரப்பி நிழலாய்த் தொடர்கின்றது. ஆனால தொடர்வது என்னவோ நிழல்கள மட்டுமல்ல என்பது யதார்த்தம்.

அவர்கள் வழங்கவுள்ள அமைதி வரும்போது அது நீண்ட, நெடுத்த மௌனமாகவும் இருக்கக்கூடும். யாரும் எதுவும் செய்ய முடியாதபடி.

| |
|---|
| தவிர்க்க முடியாத காரணங்களால் அறுவடை - 03 ஆடி முதல் மார்கழிக்கான இதழாக வெளிவருகிறது. இனிவரும் காலங்களில் பயில்நிலம் தொடர்ந்தும் காலாண்டு இதழாகவே வெளிவரும் என்று நம்பிக்கையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். |

– ஆசிரியர் குழு –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# முள்வேலிகளுக்குப் பின்னே

"என்னடா சங்கர், ஒரே யோசனை போல". திடுக்கிட்டவனாய், "ஓமடா... இல்லடா" "என்னடா வாரத்த தடுமாறுது. என்ன பிரச்சின?" "ஒண்டும் இல்லடா" "இவ்வள காலம் பழகியும் என்னட்டக் கூடச் சொல்லக் கூடாத விஷயம் என்ன?" "இல்லடா... தம்பி வவுனியா campஇல இருக் கிறானாம். ரெண்டு நாளைக்கு முதல்தான் விஷயம் தெரியும்." "முல்லத தீவுல இருந்தவன் என்ன, அவன்ட பேரும் சதீஸ் என்ன" "ஓமடா" "campஇல நடக்கிற விஷயங்களக் கேட்டா நெஞ்சு திக்கு திக்கு எண்டு அடிக்குது. அதுவும இளவயசெண்டாக் கேக்கவும் தேவையில்லை." "அதாண்டா அஞ்சு லட்சம் குடுத்தா campஇல இருந்து எடுக்கலாமாம். அதான் யோசிச்சுக கொண்டிருக்கிறன்." "விசர் வேல பாக்காத, காச வாங்கிக் கொண்டு கட்டாயம் விடுவாங்கள் எண்டு சொல்ல முடியாது. அதோட விட்டாலும் ஆமிக்காரங்களே இவரில ஏதோ விஷயம் இருக்கு, அதான் இவ்வளவு காசு கொடுத்து எடுக்கினம் எண்டு ஒரு கண்ணும் வைப்பாங்கள்."

"அதுக்காக அப்படியே விட ஏலாதுதானே?" "நீ சொல்லுறது எனக்கு விளங்குதடா. ஆனா நீ வெளியில எடுத்து அவனில சந்தேகம் வர்ற மாதிரிச் செய்யாத. எதுக்கும் கொஞ்சம் பொறுமையா இரு." "எவ்வளவு காலத்திற்குப் பொறுமையா இருக்கிறது? அவன்தான் எங்கட குடும்பத்தில கடக்குட்டி. அவனுக்குச் சின்னக்காயம் எண்டாலே அம்மா துடிச்சுப்போவா. அப்படிப் பொத்திப்பொத்தி வளர்த்தவா. அவன் இப்படிக் campஇல கஷ்டப்படுறதுக்கா அவ்வளவு கஷ்டப்பட்டு வளாத்தவா?" கமல மௌனமாகவே இருந்தான். இதற்கு என்ன சொல்வதென்றே அவனுக்குத் தெரியவில்லை. 'சும்மா' கொழும்பில இருக்கிறவாகளுக்கே campஇல நடக்கிற சம்பவங்கள் மனசக் குடையச் செய்யும், நேரிடையாகப் பாதிக்கப பட்டவர்களுக்கு எப்படி இருக்கும்? சங்கரின் மனம் எரிமலையாகக் குமுறிக் கொண்டிருந்தது. ஆனாலும் அவன் மௌனமாகவே இருந்தான். ஒரு நிமி டம், இரு நிமிடம் எனப பல நிமிடங்களுக்கு இருவரும் மௌனமாகவே இருந்தனா. "சங்கா, உன்ட நிலம எனக்கு விளங்குது. கொஞ்சம் பொறு மயா இரு. யோசிச்சு முடிவெடுப்பம்." "இளவயசாக் கிடக்குது. அதான் எனக்கும யோசனையாக் கிடக்குது. இயக்கத்தில இல்லாட்டியும் சும்மா அதச்சொல்லி இதச்சொல்லி கூட்டுக்குள்ள போட்டுடுவாங்கள். கூட்டுக் குள்ள போட்டா... பிறகு எடுக்கிறது கஷ்டம்." "வா எனக்குத் தெரிஞ்ச லோயர் ஒருத்தர் இருக்கிறார். அவரோட கதைச்சுப் பாப்பம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கானின் குடும்பமும தொண்ணூற்று மூன்று சண்டையோடு யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயாந்து முல்லைத்தீவில குடியேறியதுதான். முல்லைத்தீவுக்கு வந்த கொஞ்ச காலத்திலேயே அப்பாவும் நோய்வாய்ப் பட்டு இறந்து போனாா. கடைசியில் சங்கருக்கு மிஞ்சியது சதீஸும அம்மாவும்தான். கஷ்டப்பட்டுப் படித்து பல்கலைக்கழகத்திற்கு வந்தவன். சென்ற மாதம் தான் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியிருந்தான்.



பட்டம் பெறுவதற்கே இன னும் ஒரு வருடம் இருக கிறது. நல்ல வேலை கிடைத்தால சதீஸையும கொழும்புக்குக் கூப்பிடலாம் என்றிருந்தான். அதற்குள் திரும்பவும் சண்டை துவங்கி விட்டது. அவன் பல்கலைக் கழகத்திற்கு வந்து கொஞ சக் காலத்திலேயே அம்மாவும் இறந்து விட்டாள். சதீஸ் தெரிநதவர்களின் வீட்டில் தங்கியிருந்து படித்தான்.

"டிரிங் டிரிங்" கதவைத திறந்தார் தருமலிங்கத்தின் மனைவி. "அட கமல், இவ்வளவு காலம் இந்தப் பக்கமே காணேல்ல. இப்ப திடீரென..." இல்ல ஐயாவக் கொஞ்சம் பாத்திட்டுப் போகலாம் எண்டு தான்." "வந்து இருங்கோ. அவர் குளிச்சுக் கொண்டிருக்கிறார். இப்பதான் வந்தவர்." "பரவாயில்லை. அவர் ஆறுதலா வரட்டும்." "வாங்கில பேப்பர், மகசீன் இருக்கு. எனக்குக் கிச்சின்ல கொஞ்சம் வேல இருக்கு. வித்யா இரவு சாப்பாட்டுக்கு வர்றாள். அதான்..." "சரியம்மா, உங்கட வேலயக் கவனியுங்கோ." கமல் சில புத்தகங்களைப் புரட்டிக கொண்டிருந்தான். சங்கருக்கோ எதிலும் மனம் ஓடவில்லை. கொஞ்ச நேரத்தில தருமலிங்கம் வந்தார். "சங்கருக்கு இப்பதான் இந்தப் பக்கம் வழி தெரிஞ்சதோ?" "இல்ல அங்கிள், வேல தேடுறதே இப்ப பெரும் வேலயா இருக்குது. "இப்ப வேலேல இருக்கிறவங்களுக்கே தாங்கள் எப்ப வீட்டுக்கு அனுப்பப் படப் போறம் எண்டு பயம்... இவர் யார்?" "இவன் சங்கர். இவனும என்ட கம்பஸ்தான். IT faculty. ஆரம்பத்தில ஒரே ரூம்லதான் இருந்த னாங்க." "இப்ப என்ன செய்யுறார்?" "ஒரு கம்பனியில traineeயா இருக கிறார். போன மாசம்தான் பாசவுட் ஆனவன். இவன்ட விஷயமாகத்தான வந்தனான்." "என்ன விஷயம் சொல்லு?" "இவன்ட தம்பி வவுனியா campஇல இருக்கிறானாம். அஞ்சு லட்சம் கொடுத்தா வெளியில எடுக் கலாமாம். அதான் இவன் எடுக்க நிக்கிறான். நான் வேண்டாம் என்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்ப என்ன செய்யலாம் எண்டு உங்களக் கேக்கலாம் எண்டு...'' ''தம்பி எங்க இருந்தவர்? என்ன செய்தவர்? இயக்கத்தில இருந்தவரா?'' ''இப்ப தான் O/L செய்யிறான். தொண்ணூட்டி மூண்டு சண்டையோட முல்லத தீவுக்கு வந்திட்டினம். அப்படி ஒரு சம்பந்தமும் இல்ல.'' ''போன மாசம campக்கு போனனான். அங்க ஒரு வசதியும் இல்ல. இப்படி campஇல இருக்கிறதுக்கு சண்டேல செத்துப போயிருக்கலாம் எண்டு தோன்றும். அவ்வளவுக்குக் கெடுபிடி. அறுவது வயசுக்குக குறைஞ்சவங்கள விசாரண எண்ட பேருல எத்தன கொடும செய்யிறாங்கள்.'' கமலுக்கோ நிலைமை சங்கடமாய்ப் போய்விட்டது. சங்கருக்கு நம்பிக்கை ஊட்டலாம் என்று கூட்டிக் கொண்டு வந்தால் மனிசர் இப்படிப் பேசுகிறார் என்று. ''அப்ப தம்பிய எடுக்க முடியாதா?'' பரிதாபமாகக் கேட்டான் சங்கர். ''இப்ப வேண்டாம். கொஞ்சம் பொறுமயா இருங்கோ. நான் நிலமயச சொல்லி மேலிடத்தில யாருட்டையாவது பேசிப பாக்கிறன். அம்மா அப்பா யாரா வது இருக்கிறாங்களா?'' ''இல்ல ரெண்டு பேரும் இல்ல.'' ''என்னால முடிஞ்சதச செய்யுறன்.'' தருமலிங்கத்தின் மனைவி அனைவருக்கும் தேநீர் கொண்டு வந்தார்.



''நீங்க கதைச்சதக் கேட டுக் கொண்டுதான் இருந்தனான். அங்க சனம் படுற பாடு. சும்மா சண்ட எண்டு தொடங்கி என்னத்தக் கண்டது? இருக்கிற பிள்ளைகளையும் சொத்துக்களையும் பறிகொடுத்தது தான் மிச்சம்.'' ''இல்ல திலகம் அந்தக் காலத்தில சண்ட துவங்க வேண்டிய கட்டாயம். ஆனா... உண்மையில யாரும் தமிழ் மக்களப் பற்றி அக்கறப படேல்ல. ஒவ்வொருத்தரும் இத எப்படி தங்களுக்கு சாதகமாப் பயன்படுத தலாம் எண்டுதான் பாத்தினம். எல்லாத்துக்கும் முதல்ல தமிழரிட்ட ஒற்றுமை இல்ல. ஒவ்வொருத்தரும் தாங்களும் தங்கட பிள்ளைகளும் நல்லா இருந்தாப் போதும். அடுத்த வீட்டில இழவு விழுந்தாலும் கவல இல்ல.'' ''ஓ... இப்ப செத்த வீடுகளுக்கே சங்கிலி போட்டுக் கொண்டெல்லே வரீனம்.'' ''அது ஒவ்வொருத்தரினதும் மனோநிலையைப் பொறுத்தது. இதச் செய், இப்படிச் செய் எண்டு இந்த விஷயத்தில நாங்கள் சொல்லமுடியாது. செத்த வீட்டுக்கு எப்படி வரோணும் எண்டு அவங்களுக்கு தெரியோணும். துக்கத்தில பங்கெடுக்க வர்றது போய் அரட்டையும் கும்மாளமுமாப்போச்சு.''

''டிரிங் டிரிங்'' ''திலகம் யாரெண்டு பார்.'' ''வித்யாவாகத்தான இருக்கும்.'' வந்தவுடனே வித்யா பரபரப்பாக, ''வர்ற வழியில ஒருத்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருட்டுக்குள் இருந்து**

# மத்தியஸ்த சபை



கடந்த இதழில் தேசவழமைச் சட்டம் பற்றிப் பாரத்தி ருந்தோம். அக்கட்டுரை தேசவழமைச் சட்டம் பற்றிய பூரணத்துவம் இல்லாத போதிலும் அச்சட்டம் பற்றிய அறிமுகத்தையேனும் கொடுத்திருக்கும் என நம்புகிறேன். இந்த இதழில் இடம்பெற இருப்பது 1988ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 72ம் இலக்க மத்தியஸ்த சபைச சட்டம் பற்றியதாகும்.

*"சண்முகலிங்கத்துக்கும் ஆறுமுகத்துக்கும் இடையே நெடுநாட களாக துவிச்சக்கர வண்டியின் உரிமை தொடர்பான பிணக்கு இருந்து வந்தது. இதற்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ள சண்முகலிங்கம் முனை ந்தபோது மத்தியஸ்த சபை எனும், நீதிமன்றத்திற்குப் புறம்பாகப் பிணக் குகளைத் தீர்க்கும் அமைப்புப் பற்றிக் கேள்விப்பட்டான். ஆனாலும் மத்தி யஸ்த சபை முறைமை என்றால் என்ன என்று அவனுக்குப் பூரணமாக விளங்கவில்லை. அவனைப் போன்றே எம்மில் பலருக்கும் மத்தியஸ்த சபை தொடாபாகத் தெளிவு இருப்பதில்லை. எனவே அது தொடர்பாக இம்முறை நோக்குவோம்."*


பொதுவாக நீதிமன்றத்து க்குப் புறம்பாகப் பிணக்குகளைத் தீர்க்கும் முறைகள் பல உள்ளன. ஒம்புட்ஸ்மன, மனித உரிமைகள் ஆணைக்குழு, இணக்கச்சபைகள என்பன அவற்றிற் சிலவாகும். விரை வாகவும், செலவு குறைந்ததுமான வழிமுறையாக இவை காணப்படுவ தனால் மக்களால விரும்பப்படும் தெரிவாக உள்ளன. அத்தகைய தான ஒரு அமைப்பே மத்தியஸ்த சபை (Mediation Board) ஆகும்.

ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாக மத்தியஸ்த சபை விளங்குகிறது. அவரகளின் நயமனம ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படு கிறது. ஐந்து உறுப்பினர்களேனும் உயர் நீதிமன்றத்தில் இருந்தோ மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் இருந்தோ தெரிவு செய்யபபட்ட நீதித்துறை உறுப்பினராக இருத்தல் வேண்டும். உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று வருடங்கள் ஆகும். மூன்று வருடங்களின் முடிவில ஒருவர் மீளவும் நியமிக்கப்படலாம். மத்த யஸ்த சபைக்கான தலைவராக உயர் நீதிமன்றம அல்லது மேன்முறை யீட்டு நீதிமன்றத்தில் இருந்து நியமிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட ஒருவரை ஜனாதிபதி நியமிக்கலாம். மத்தியஸ்த சபையின் தலைவா உட்பட எவரேனும் உறுப்பினர் ஜனாதிபதிக்கு முகவரியிட்டு அனுப்பும் கடிதம் மூலம் பதவி விலகலாம். மேலும் ஜனாதிபதி விரும்பினாலும் எத்தகைய விளக்கமும் இன்றிப் பதவி விலக்கலாம். மத்தியஸ்த சபைக் கூட்டமொன்று நடைபெறும் போது குறைந்தது பட்சம் மூன்று உறுப்பினர்களேனும் சமூகமளித்திருக்க வேண்டும்.



அடுத்து மத்தியஸ்த சபையின் கடமைகளை நோக்கினால் மத்தியஸ்தர்களின் நியமனம், இடமாற்றம், பதவிநீக்கம், ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான அதிகாரங்கள் இதற்குண்டு. மத்தியஸ்தர்களின் கடமை, பணி தொடர்பான கட்டுப்பாடும் இதனிடம் உண்டு. தேவையேற்படின மத்தியஸ்தருக்கான ஆலோசனையையும் வழங்குகிறது. அமைச்சரினால் வெளியிடப்படும் வர்த்தமானி மூலம் குறித்த பிரதேசத்தில் இம்முறை அமுலுக்கு வரும்.

பிணக்கொன்றினைத் தீர்க்கும போது மூன்று மத்தியஸ்தர்கள் நடுவர்களாகத் தொழிறபடுவர். அவர்களில் இருவர் பிணக்குக்கு உரிய தரப்பினரால் நியமிககப்படுவர். அதாவது பிணக்குக்குரிய இரு தரப்பினரும் ஒவ்வொரு மத்தியஸ்தரை நியமிக்கலாம். நியமிக்கப்பட்ட அவர்களிருவரும் இணைந்து மூன்றாவது மத்தியஸ்தரை நியமிப்பார்கள். மூன்றாவது மத்தியஸ்தரே தலைவராக விளங்குவார்.

இச்சபையானது 25,000 ரூபாவுக்குக் குறைவான அசையும், அசையாச் சொத்துத் தொடர்பான கடன், சேதம் என்பவற்றை விசாரிககிறது. இச்சட்டத்தின் 13ம் பிரிவானது முப்பது நாட்களுக்குள் பிரச்சனைக்கான தீர்வு வழங்கப்பட வேண்டும என வலியுறுத்துகின்றது. பிணக்குகள் தீர்க்கப்படுகின்றபோது நீதிமன்றங்களில் பின்பற்றப்படுகின்றதைப் போன்ற முறைமை பின்பற்றப்படுவது இல்லை. அது மட்டுமன்றிச் சட்டத்தரணிகளின் பிரதிநிதித்துவமும் முற்றாகத் தடுக்கப்படுகின்றது. பிணக்குகளைத் தீர்க்கும் போது மத்தியஸ்தர்கள் சாட்சிகளைப் பிணக்குக்கு உரியவர்களின் முன்னிலையிலோ தனியாகவோ அழைத்து விசாரிக்கலாம்.

தீர்ப்புகளை எடுத்துக் கொண்டால், ஒரு தரப்பினரை மட்டும் திருப்திப் படுத்துவதாக அன்றி இரு தரப்பினரையும் இணககத்திற்குக் கொண்டு வருவதாக அமைகிறது. இணக்கமான தீர்ப்பு (Amicable Settlement) இதன முக்கியமான அம்சமாகும். பிணக்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான தீர்வு எட்டப்படாதபோது Non Settlement Certificate இனை அடிப் படையாகக் கொண்டு நீதிமன்றம் மூலமாகத் தீர்வினைப் பெறலாம்.

மத்தியஸ்த முறையானது சட்டத்தரணிகளின் பிரதிநிதித்து வத்தைத் தடுக்கும் அதேவேளை வேறு வகையினருக்கு இதனை வழங்குகிறது. அதாவது கணவன் மனைவியையோ, மனைவி கண வனையோ பிரதிநிதித்துவப்படுத தலாம். பராயம் அடையாத சிறு வர்கள், ஊனமுற்றவர்கள் ஆகி யோரைப் பெற்றோர் அல்லது பாது காவலர் பிரதிநிதித்துவப்படுத்த முடிகிறது.

இவ்வாறாக 1988ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மத்தியஸ்த சபை முறைமை சமூகத்திற்குச் சுமுக மான தீர்வினைப பெற்றுக் கொடுப் பதற்குரிய தெரிவாக விளங்குகிறது. எவ்வாறாயினும் நிதி நெருக்கடி இதற்கான சவாலாக அமைகிறது. இதனைக் களைவதன் மூலம் மத்தி யஸ்த சபை முறையின் வினைத திறனை மேலும் அதிகரிக்கலாம்.

**உயர் நீதிமன்றம் - இலங்கை நீதிமன்ற வரிசையில் மிகவும் மேல் நிலையில் உள்ள நீதிமன்றம்.

**மேன்முறையீட்டு நீதிமன்றம் - நீதிமன்ற வரிசையில் உயர் நீதி மன்றத்துக்கு அடுத்த நிலையில் காணப்படும் நீதிமன்றம்.

**அசையும் சொத்து - வாகனம், நகை போன்ற ஒரு இடத்தில இருந்து அசைக்கக் கூடிய சொத்துக்கள்.

**அசையாச் சொத்து - வீடு, காணி போன்ற அசைக்கமுடியாத சொத்துக்கள்.

**Non Settlement Certificate - மத்தியஸ்தர்களால் பிணக்கொன் றைத் தீர்க்க முடியாத போது பிரச்சனையைத் தீர்க்க முடியாமைக்கான காரணத்தை விளக்கமாகக் குறிப பிட்டு வழங்கப்படும் சான்றிதழ்.

-வ.பவித்திரா-

***

கல்வியின் மூலமாகத்தான் ஒருவருடைய அறிவில் காணக்கூடிய குறைபாடுகளை உணரமுடியும். பிறருக்குப் பல விடயங்களைப் போதிக கும் சமயத்தில்தான் நம்முடைய அறிவின் பற்றாக்குறை நமக்கு வெளி யாகிறது. இதற்குப்பிறகுதான் நாம் நம்முடைய அறிவை விருத்தி செய்ய வும், அறிவு வளர்ச்சிக்கும் முனைகிறோம். பிறருக்குப் போதிப்பதும், கல்வி கற்பதும் ஒன்றை ஒன்று தழுவிக்கொள்கின்றன.

- கான்பியூசியஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்படச் சிறுகதை / கவிதை



இந்த அட்டைப்படம் தொடர்பில் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களை கவிதையாகவோ சிறுகதையாகவோ வடிவம் கொடுத்து அனுப்பிவைத்தவர்களின் ஆக்கங்களில் ஒன்று தெரிவின் பின் இங்கே.....

### எழுச்சிகளை நோக்கி

உழைப்பாளிகள் வேதனையில்
பசி தீர்க்கும்
வேட்டை நரிகள் - அவர் தம்
வேதனையின் வெந்தணலில்
குளிர் காயும் முதலாளிகள்.

ஓங்கிய கரங்கள்
இன்னும் நீள்கிறது
உயரப் பறப்பவற்றை
உழைப்பாளிகள் வியர்வைவழி
எப்படியும் எட்டுவதற்காய்..


முதலாளித்துவ சாக்கடையில்
சிக்கித்தவிக்கும் சீவன்கள்
உயிர் வாழ்வதற்கே மட்டுமாய்
உரிமைகளைத் துறந்த வர்க்கம்.

உரமேறிய கரங்கள்
ஒன்றாய் இணையட்டும்
உரக்கக் குரல் எழுப்பி
உரிமைகளை வெல்லட்டும்.
தொழிலாளிகள் களமதில்
முதலாளிகளும் கால் பதிக்கட்டும

-குந்தவி-

***********************

### *"பொம்பர்" வரும் பொழுது*



அகிலத்தை தூங்க வைக்கும் பொழுது
அமைதியான மாலை நேரம்
அதிசய உலகின் அபூர்வ வழக்கம்
அவசரமில்லா
அயர்ந்து தூங்கும் பொழுது
திசை திருப்பும் திசையறி கருவி
திடுக்கிட வைக்கும் திடீர் பொழுது
திக்கி திணறும் காரிருள் வேளை-இது
திரும்பி வராத தித்திக்கும் நேரம்

J.தனுஷா
சைவ மங்கையர் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

இன்று, தொலைக்காட்சி முக்கியமானதொரு பொழுதுபோக்கு ஊடக மாக மாறிவிட்ட நிலையில், மக்களது வாழ்வில் தொலைக்காட்சி நிகழ்ச்சி கள பெருமளவில் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி நிற்கின்றன. அவ்வாறான நிகழ்ச்சிகளில் நேரடிப் போட்டி நிகழ்ச்சிகள் எனப்படும் reality shows முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்நேரடிப் போட்டி நிகழ்ச்சிகள் எனப்படுபவை என்ன? இவை எவ்வாறு தோற்றம் பெற்றன? இத்தகையதொரு பிரபல்யத்துக்குக் காரணம என்ன? அந்நிகழ்ச்சிகள் சமூகத்திற்கு வழங்கி வருபவை என்ன? இவற்றில் உள் ஒளிந்திருக்கும் வியாபாரநோக்கு என்ன என்பதைச் சற்றே பார்ப்போம்.

ஆரம்ப நாட்களில் தொலைக்காட்சி நிறுவனங்கள் தம்மைப் பிரபல யப்படுத்தும் நோக்கில் தொடங்கிய இசை, நடனப் போட்டி நிகழ்ச்சிகளே இவை. தொடக்க நாட்களில் சமூகத்தின் பிரபல்யமான நட்சத்திரங்கள போட்டியிட்டு தமது தனித்திறமைகளை வெளிக்காட்டி அதிலிருநது வெற்றி

# தொலைக்காட்சிப் போட்டி நிகழ்ச்சிகள்: ஆரோக்கியமற்ற சமுதாயத்தை நோக்கி...

யாளர்கள் தெரிவுசெய்யப்படடனர். இவ்வாறே பிரபல்யங்களிலிருந்து விலகி சாதரண மக்களைக் குறிவைத்தது தொலைக்காட்சிகள்.

சுவாரசியமும் போட்டி மனப்பாங்கும் மேலோங்கி நிற்கும் மாயத தனமான நிகழ்ச்சிகளையே தொலைக்காட்சிகள் எமக்கு வழங்குகின்றன. பார்வையாளரை சுவாரசியப்படுத்தும் நோக்கிலும் போட்டியையும் போட்டி யாளரையும் பிரபல்யப்படுத்தும் நோக்கிலும் ஒளிபரப்பப்படும் சித்தரிக்கப் பட்ட சண்டைகள், வாக்குவாதங்கள் தகராறுகள் சமூகத்திற்கு ஒரு மாயை யான விம்பத்தையே வரைந்து நிற்கின்றன.

எந்த ஒரு சமூகச் சிந்தனையுமற்று நடத்தப்படும் இப்போட்டி நிகழ்ச்சிகள் இளம் சமுதயத்தினரையே குறிவைத்து நிற்கிறது. திறமை களை வெளிக்கொணருதல் எனும் போர்வையில் நடாத்தப்படும் இப்போட்டி களில் சாவி வழங்கப்பட்ட பொம்மைகளாகவே இளைஞர்கள் செயறபடு கிறார்கள். பிரபல்யம் எனும் அடையாளத்திற்காய் தமது கல்வி, உழைப்பு என்பவற்றை இடைநிறுத்தும் செயற்பாடுகளை ஊடகங்கள் தமது நிகழ்ச்சி க்குக் கிடைத்த பெரும் வரவேற்பாகவே சித்தரிக்கிறது. உதாரணமாக சிரச சுப்பர் ஸ்டார்-2இல் பங்கேற்ற வைத்தியபீட மாணவன் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு வருட கல்வியையே இந்நிகழ்ச்சிக்காக இடைநிறுத்தினார என்பது குறிப்பிடததக்கது.

வெற்றி, தோல்வியைச் சமகண் கொண்டு பார்க்கும் தன்மை இளைஞரகளிடையே அருகி வருவதை இந்நிகழ்ச்சியினூடு நாம் காணக்கூடியதாக இருக்கிறது. காரணம், ஒரு போட்டியாளரை வெளியேற்றும் போது நடுவரகள் அதை வெளிப்படுத்தும் விதமும் வெளியேற்றலின் பின்னர் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரால் கேட்கப்படும் கேள்விகளும் அவை ஒளிபரப்பப்படும் விதமும் தோல்வியை மேலும் மிகைப்படுத்திக் காட்டுவதாகவே அமைகிறது. இது நிகழ்ச்சியைச் சுவாரசியப்படுத்துவதாக அமைந்தாலும் போட்டி பற்றியும வெற்றி, தோல்வி பற்றியுமான இளையவர்களின் கண்ணோட்டத்தைப் பிழையான பாதையில் திசை திருப ..றது.

மழலை மாறாச் சிறுவர்களிடத்திலும்கூட இவ்வாறான நிகழ்ச்சிகள் திணிக்கப்பட்டுள்ளதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இங்கு பெற்றோர தமது ...ளைகளை நடிக, நடிகைகளாக ஆக்கும் முயற்சியிலேயே களத்தில் குதித்துள்ளனர் என்பது மறுக்க முடியாது. சிறுவயதிலேயே மேடைப் ...யத்தைப் போக்கித் தனித்திறமைகளை வளர்க்கும் நோக்கில இவை நடாத்தப்படுகின்றன என்றும் இது ஒரு புதிய முயற்சி என்றும தொலைக்காட்சி நிறுவனங்கள் தம்மை விளம்பரப்படுத்தி நிற்கின்றன. இதையேதான் எமது பாடசாலைகளும காலங்காலமாக வருடாந்தம ஆங்கிலவிழா, கலைவிழா போன்ற நிகழ்வுகளில் செய்து வருகின்றன. அதில் தமது பிள்ளைகள் பங்கேற்பதில் ஆர்வஞ செலுத்தாத பெற்றோர கூட தமது சிறார்கள் ஒரு தடவையேனும் தொலைகாட்சியில் தோன்ற வேண்டும் என்ற நோக்கில் இந்நிகழ்ச்சிகளுக்குப் பிள்ளைகளை அனுப்புகிறார்கள். உளவியல் நோக்கில் பார்த்தாற் கூட சிறுவர்களின் மனதில பிரபலம், அங்கீகாரம் போன்ற நிலையற்ற விடயங்களுக்கான முக்கியதத்துவம் அதிகரித்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு நிமிடத்திலும் நட்சத்திரமாகலாம்" (Star in a minute). இது சிறுவர்களுக்கான பிரபல்யமான போட்டி நிகழ்ச்சி. ஒரு நிமிடத்திலும நட்சத்திரமாகலாம் எனும் எண்ணமே சிறார்களின் முயற்சி, உழைப்பு, ஊக்கம், உற்சாகம் என்பவற்றிற்கு முட்டுக்கட்டையாகிவிடுகிறது. சிறு வயதிலேயே உழைப்பை உதாசீனப்படுத்தும் போக்கையும் குறுக்கு வழியிலும் முன்னுக்கு வரலாம் என்ற தவறான நோக்கையும் இது போன்ற நிகழ்ச்சிகள் சுட்டிநிற்கின்றன.

இந்நிகழ்ச்சிகள் மக்களிடையே பெரும் வரவேற்புப்பெற்றுப் பருவம பருவமாக நடத்தும் அளவுக்கு இப்போது முன்னேற்றம் கண்டுவிட்டன. ஆனால் முன்னைய போட்டிகளின் வெற்றியாளர்கள, நட்சத்திரங்களின் உண்மை நிலை எந்த ஒரு ஊடகத்தாலும் வெளிக்காட்டப்படுவதில்லை. போட்டியில் ஜெயிப்பீர்களாயின உங்கள் வாழ்வில் என்றும் காணாத சிறப்பையும் புகழையும் எய்த வழிவகை செய்வோம் எனப் போட்டியாளரகளையும் பார்வையாளர்களையும் பரவசப்படுத்தக கூறப்படும வார்த்தைகள் வெறும் பொலிகாளைகளை உருவாக்கும் செயற்பாடாகவே அமைகிறது.

இவ்வாறான வர்ணனை வார்த்தைகளையும் உணர்வு பூர்வமான உரையாடல்களையும் ஒளி, ஒலிபரப்பியே எமது ஊடகங்கள் பெரும வருமானத்தை ஈட்டி வருகின்றன. வெற்றியாளரைத் தெரிவுசெய்யும் நடைமுறையில் கூட குறுந்தகவல் (sms) வாக்குகள் எனும் வருமானம் அள்ளித் தரும் வழிமுறை கைக்கொள்ளப்படுகிறது.

சாதாரண குறுந்தகவலுக்குரிய கட்டணத்தைவிடக் கிட்டத்தட்டப் பத்து மடங்கு கட்டணத்தைச் செலுத்தியே நாம் எமது வாக்குகளை வழங்குகிறோம். அதில் வரும் வருமானம் தொலைக்காட்சி நிறுவனத்திற்கே தவிர போட்டியாளருக்கல்ல. போட்டியாளரை முன்னிறுத்தி ஈட்டப்படும் வருமானத்தில் ஊடகங்கள் குளிர் காய்ந்து கொண்டிருக்கின்றன.

மக்களே வெற்றியாளரைத் தீர்மானிப்பர் எனின் நடுவர்கள் எதற்கு? ஊடகங்களுக்கு வருமானத்தையும் பிரபல்யத்தையும் தேடித்தரக்கூடிய போட்டியாளர்களைத் தக்கவைப்பதற்கு நடுவர்கள எனும் பாலம் ஊடகங்களுக்குத் தேவைப்படுகிறது.

ஊடகங்களின் புகழ், வருமானநோக்கு, விளம்பர அனுசரணையாளர்களின் ஆதிக்கத்தின் களத்தில் அரங்கேறும் போட்டி நிகழ்ச்சிகள் முற்று முழுதாக ஒரு கலைஞனை இனங்காணத்தவறுகிறது. முதலாளித்துவமனோ நிலையில் தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பின்னரே சமூகத்தை நோக்கி வர்ணம் பூசிய நரிகளாக இப்போட்டி நிகழ்ச்சிகள மக்கள் மத்தியில வலம் வருகின்றன.

மேலைத்தேய நிகழ்ச்சிகளை அடியொற்றி நடாத்தப்படும் நிகழ்ச்சிகளில் தமக்குரிய தனித்துவத்தை இழந்து மேலைத்தேய பாணி, உடை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரத்தை வெளிப்படுத்தும் வகையில் பங்கேற்கிறார்கள். இது நிகழ்ச்சி களின் பிரபல்யத்துக்காக போட்டியாளர்களிடையே ஊடகங்களால் திணிக் கப்படும் செயற்பாடு. காலப்போக்கில் அத்தகைய கலாசாரப பழக்கவழக் கங்கள் சமூகத்தின் மத்தியிலும் ஊடுருவத் தொடங்கிவிட்டது. எமக்குரிய தனித்துவத்தை மறந்து பிறநாட்டுக் கலாசாரத்துக்கு நம்மை அறியாமலேயே அடிமையாகிறோம்.

எமது நாட்டில் இத்தகைய நிகழ்ச்சிகளின் பிரபல்யத்தில் இந்திய நிகழ்ச்சிகளின் ஆதிக்கம் மேலோங்கி நிற்கிறது. இந்தியாவில் இத்தகைய நகழ்ச்சிகள் மக்களது அன்றாட வாழ்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி நிற்கிறது. டெல்லியில இத்தகைய நிகழ்ச்சியொன்றில் இறுதிச்சுற்று வரையும பங்கேற்று இறுதிச்சுற்றில் பரிசை வெல்லாத சிறுமி அவ்வதிர்ச்சியின் விளைவால் சுயநினைவிழந்து சுகவீனமுற்றார். இச்சம்பவம், இவ்வாறான போட்டிகள் சமூகத்தில் எந்தளவுக்கு ஆதிக்கம் செலுத்துகின்றன என்றும அது உளவியல் ரீதியாக எத்தகையதொரு பாதிப்பை ஏற்படுத்தி நிற்கிறது என்பதையும் எமக்குப் புலப்படுத்துகிறது. அச்சம்பவத்தைத் தொடர்ந்து டெல்லியில் இவ்வாறான போட்டி நிகழ்ச்சிகள் தேவைதானா என்ற விவாதமும் நடந்தது. ஆழ்மனதைப் பாதிக்கும் இப்போட்டிகள் இன்னமும் எமக்குத தேவைதானா என்பதே இவ்விவாதத்தின் முக்கிய கேள்வியாக இருந்தது.

ஒரு காலகட்டத்தில் மக்கள் தங்கள பொழுதுபோக்கிற்காகப் பல்வேறு பொது இடங்களில் கூடி உணர்வுகளை வெளிப்படுத்தவும் பண




பாட்டைப் பகிர்ந்து கொள்ளவும் முயன்றனர். அந்த பண்பாட்டுப் பகிர்வு தற்போது முடக்கப் பட்டு விட்டது. மக்களை வெளியே செல்ல விடாமல் வீட்டுக்குள்ளேயே பூட்டி முடக்கி வைக்கும் ஒரு சுயநலச செயலை இந்த நிகழ்சசி கள் செய்து வருகின்றன. மொத்தத்தில மக்களின சமூகச் சந்திப்புகள முற்றிலும சாத்தியமின்றிப் போய்விட்டது. ஏற்கனவே சமூகத்தோடு தொடர்பைத் துண்டித்துக் கொண்டு, பொதுச் சந்திப்புகளைத தவிர்த்து விட்டு தங்களைத் தனிமையில் இருத்திக் கொள்ள விரும்பிய நடுத்தர, பணக்கார வர்க்கத்தினருக்கு மேலும் ஒரு சில கவரச்சிகளை வழங்கி வீட்டுக்குள்ளேயே புழுங்கிப் போகச் செய்கிற ஒரு சமூக விரோதப்பணியை இந்த நிகழ்ச்சிகள் செய்து வருகின்றன. நவீன மனிதர்களுக்கு மிருகம் போன்றதொரு இருப்பை ஏற்படுத்தித் தருவதுதான் இதன் பிரதான நோக்கம்.

உலகமயமாதலின் தொடரும் விளைவுகளான வளச்சுரண்டல், உழைப்புச் சுரண்டலையே ஊடகங்களும் அரங்கேற்றி வருகின்றன. ஏகாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திய மனோநிலையில் நடாத்தப்படும் இப்போட்டி நிகழ்ச்சிகள் உண்மையில் ஆரோக்கியமான போட்டிகளை வேண்டி நிற்கவில்லை.

போட்டிகள் வரவேற்கத்தக்கன. அது சமூகத்தைத் தனிமனித வாதத்தில் இருந்தும் விடுவித்து பரஸ்பர மனோநிலைக்கு இட்டுச் செல்லும். அங்கு தீர்வுகள பொதுப்புத்தி மனநிலையிலிருந்து நீங்கி எடுக்கப்பட வேண்டும்.

ஆனால் இன்றைய நாட்களில் ஊடகங்களால் நடாத்தப்படும போட்டி நிகழ்ச்சிகள் அத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றத் தவறுகின்றன. இன்னமும் சமூகத்தைச் சமூக, கலாசார, பொருளாதார சீரழிவுகளுக்கே இட்டுச் செல்கிறது. போட்டிகள் ஆரோக்கியமானதாகவும் எந்த ஒரு புறக் காரணிகளதும் ஆதிக்கமற்றும் நடாத்தப்படுமிடத்து நிச்சயமாக அவை சமூகத்திற்குப் பயனுள்ளதாக அமையும்.

-வரதா-

***

# வடுக்கள்

ஓட்டை வீடுகளும்
உடைகின்றது விலாசமின்றி
செல்லடிபட்ட நாயின் செதில்களும் சிரிக்கிறது
முற்றத்து வேம்பு முச்சுவிட முடியாமல்
ஞாயிற்றுக் கதிர்களில் நாறுகிறது காற்று

ஆடையின்றி
வாடைக்குள்
அலையும் சிறுவன்
சாப்பிடுவதற்காய்
செல்லுகளின்
சில்லுகளைச்
சேகரிக்கின்றான்.



*-S. சுஜாதா*
*சைவ மங்கையர் வித்தியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதங்கள் பற்றிய அறிமுகம்

முஹம்மது நபி தலைமையிலான முந்நூறு முஸ்லிம்களை ஆயிரக் கணக்கான மிலேச்சாகள் தாக்குகின்றனா. யாருக்கு வெற்றியெனத் தீமானிக்கமுடியாத அளவிற்கு உக்கிரமாக நடைபெற்றது. இந்த பத்ருப் போரின் முடிவுதான் இஸ்லாம் தொடாந்து நிலவப் போகிறதா எனத தீமானிப்பதாய் இருந்தது. அதில் முஸ்லிம்கள் வென்றதைத் தொடா்நது இஸ்லாம் வேகமாக வளாந்து வரும மதங்களில் முதன்மையானது. ஒரு மதத்தின் கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் நான்கு பக்கங்களில் விளக்க முடியாது. இஸ்லாம் பற்றிச் சிறிய அறிமுகத்தையே மேறகொள்ள இருக்கிறேன்.

இ ஸ் லா ம்

இஸ்லாம் என்பது ஓா அரபுச் சொல். இஸ்லாம் அடிபணிதல், அாப்பணித்தல் எனப் பொருள்படும். அதாவது எல்லா உலகங்களையும் படைத்துப் பாதுகாக்கின்ற ஓரிறைவனுக்கு அடிபணிதல் என விளக்கப்படும். இஸ்லாம் என்ற சொல் ஸலாம் என்ற சொல்லிலிருந்து வந்தது. ஸலாம் அமைதி எனப் பொருள்படும். இஸ்லாத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாதது ஒரு பக்கம், வேணடுமென்றே இஸ்லாமிய வரலாற்றையும் இஸ்லாத்தைப் பற்றிய உண்மைகளையும் திரித்தும் சிதைத்தும் கூறுவது இன்னொரு பக்கம் என்று பல திசைகளில் இருந்தும் இஸ்லாத்திற்கு இல்லாத முகங்களை இஸ்லாம் என்று காட்டுவது காலங்காலமாகத் தொடாந்து கொண்டுதான் இருக்கிறது.


### *இஸ்லாமின் தோற்றம்*

இதன் தோற்றம் பற்றிக் குழப்பமான கருத்துகளே காணப்படுகின்றன. பெரும்பாலான வரலாற்றாசிரியாகள் இஸ்லாம் ஏழாம நூற்றாண்டில் முஹம்மது வால் பரப்பப்பட்டது எனக் கூறுகின்றனா். அதாவது மக்காவில் ஜிப்ரல என்ற தேவதை முஹம்மதுவுக்கு இஸ்லாமியத் தத்துவஙகளைப் போதித்ததைத் தொடர்ந்து இம்மதம் பரவியது. ஆனால் முஸ்லிம்கள் முஹம்மதுவின் பிறப்பிற்கு முன்னரே இஸ்லாம் இருந்ததாகவும் பூமி தோன்றிய காலத்திலேயே இஸ்லாம் தோன்றியதாகவும் முதல் மனிதா ஆதாம் தொடக்கம் அனுப்பப்பட்டு வந்த இறைதூதாகளில் முஹம்மது இறுதியானவர் என்றும் நம்புகின்றனா. இப்படிச் சொல்வதால், இஸ்லாததிற்குப் புதியதொரு விளக்கத்தைக கொடுத்து அனைவரையும் இஸ்லாத்திற்குள் இணைத்துவிடுகின்ற ஓர் அடிப்படைவாத உத்தியைக் கையாளுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தின் நம்பிக்கைகளுக்கு முன்வைக்கும் சான்றுகள் அனைத்தும் திருக்குர்ஆனை அடிப்படையாகக் கொண்டவை. திருக்குர்ஆன் என்பது இறைவனுடைய பேச்சு. ஆனால் ஹதீஸ் என்பது முஹம்மது நபியவாகளின் பேச்சு. இஸ்லாத்தில் உள்ள எநத விஷயத்திற்கும் முதலில் இறைவன் என்ன சொல்கிறார் என்று பாாக்க வேண்டும். பினனா அது சம்பந்தமான ஹதீஸ்களில் என்ன விளக்கம் என்று பார்க்க வேணடும். திருக்குர்ஆனுக்கோ அல்லது ஹதீஸுக்கோ முரண்படுகின்ற விளக்கததை ஏற்க முடியாது. இது எடுகோளையே நிறுவுவதைப் போன்றதாகும். மற்றைய மதங்களிலுள்ள சில தத்துவக் கருத்துக்களைப் புதிய சில கருத்துக்களுடன இணைத்து தோற்றுவிக்கப்பட்ட மதமே இஸ்லாம். ஏனைய மதங்களைப் போன்று இதிலும் மூடநம்பிக்கைகளுக்குக் குறைவில்லை.



## முஸ்லிம்களின் கடமைகளும் நம்பிக்கைகளும்

முஸ்லிம் பெற்றோருக்குப் பிறந்து விடுவதால் ஒருவர் முஸ்லிமாகி விடுவதில்லை. இஸ்லாத்தில் கடமையாக்கப்பட்டுள்ள அடிப்படைகளில நம்பிக்கை வைத்து, அதன்படி நடப்பவர் மட்டுமே முஸ்லிமாவார்.

**அடிப்படைக் கடமைகள:**

i கலிமா - வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இல்லை. முஹம்மது அவன் தூதர்.

ii தொழுகை - தினமும் ஐந்து வேளை தொழுகை.

iii ஜகாத் (தூய்மைப்படுத்தல்) கொடுக்கப்படும் பொருளும் மனமும தூய்மைப்படும்.

iv நோன்பு - எல்லாம் கிடைக்கும்போதே இறைவனுக்காக ஒதுக்குவதாகும்.

v புனித ஹஜ், இஹ்ராம் அணிவா - இறைவனுக்கு முழுமையாகத் தன்னை அாப்பணித்தவாகளாக ஒவ்வொரு முஸ்லிமும் இருக்கவேண்டும் என்பதையே இஹ்ராம் அணிவது குறிக்கும்.

இவற்றுடன் பின்வருவனவற்றிலும் முஸ்லிமானவன் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்:

1. தவ்ஹீது எனப்படும் இறைவனின் ஒருமை மீது
2. மலாயிகத் எனப்படும் ஒளியால் படைக்கப்பட்ட வானவர்கள் மீது
3. இறைவன் அனுப்பிய நபிமார்கள் மீது
4. அவர்களுக்கு அருளப்பட்ட வேதங்கள் மீது

    i. மோசஸுக்கு அருளப்பட்ட தவ்ராத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. Davidக்கு அருளப்பட்ட ஸபீர் எனும் சங்கீதம்
iii. Jesusக்கு அருளப்பட்ட இன்ஜீல் (Gospel)
iv. முஹம்மதுக்கு அருளப்பட்ட திருக்குர்ஆன்

5. இறப்பின் பின்னரான வாழ்வின் மீது

இவற்றைத் தவிர வேறு பல நம்பிக்கைகளும் உண்டு.

## உணவு

உணவுகளில் விலக்கப்பட்ட உணவுகளைத தவர்க்க வேண்டும். இவை ஃஅராம் என அழைக்கப்படும். பன்றி, நாய் இறைச்சி, குருதி, மாமிச உண்ணி, பறவைகளின் இறைச்சி, சாராயம் போன்றவையும் ஃஅராமான உணவுகளாகும். ஃஅராமான உணவுகளோடு உண்ண அருவருப்பான உணவுகளையும விலக்கவேண்டும். அருவருப்பு என்பது தனிமனித விருப் பத்தைப் பொறுத்தது. பொதுவாக அனைத்து சைவ உணவுகளும, தாவர உண்ணி, பறவைகளின் இறைச்சிகளும், மீன் வகைகளும அங்கீகரிக்கப் பட்டவையாகும். அங்கீகரிக்கப்பட்டவையாயினும் அவை இஸ்லாமிய முறைப் படி ஓதி வெட்டும்போதே ஃஅலால் என அழைக்கப்படும். இஸ்லாமிய முறைப்படி ஓதி வெட்டாவிடில் அவை ஃஅராமானவையாகும்.

## குடும்ப முறை

குடும்பங்களைப் பொறுத்தமட்டில் கணவனே குடும்பத்தலைவன். குடும்பத்தி பொருளாதாரத் தேவைகளைப் பூரத்தி செய்வது அவன கடமை. மனைவிக்குச் சமஉரிமை உண்டு. ஒரு ஆண் அதிகபட்சம் நான்கு பெண்களைத் திருமணம் செய்யலாம். இதனைப பெரும்பாலானோர் பெண்க ளுக்கெதிரான அடக்குமுறையாகவே பார்க்கின்றனர். இது அருளப்பட்ட காலகட்டத்தைக் கருத்திற் கொள்ளவேண்டும். அக்காலகட்டத்தில் பெண கள் வெறும் போகப்பொருளாகவே பார்க்கப்பட்டனர். ஒருவா மணக்கும பெண்களுக்கு வரையறையே இல்லா திருநதது. உடனடியாக ஒருவர் ஒருத் தியை மட்டுமே மணக்கவேண்டும என்று முஹம்மது நபி கூறியிருப்பின், அவா பேச்சு எடுபட்டிருக்காது. முதலில் ஒரு வரையறையை ஏற்படுததுவதன் மூலம் அம்மக்களைக் கட்டுப்படுத்தினார். ஆனால் இஸ்லாம் பலதாரமணத்தை முற்றாக ஆதரிக்கின்றது எனக் கூற முடியாது. ஒருவன் மணக்கும் நான்கு



பெண்களையும் மனதளவிலும் பொருளாதார அளவிலும் சமமாக நடத்தும் பக்குவமும் வசதியும் பெற்றிருக்கவேண்டும் என்ற விதியை ஏற்படுத்துவதன மூலம் பலதாரமணத்திற்கு ஒரு தடையை ஏற்படுத்தியிருக்கிறது. ஏனெனில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான முஸ்லிம்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியிருக்கின்றனர். ஆக பெரும்பாலான முஸ்லிம்களுக்குப் பலதாரமணம் மறுக்கப்பட்டுள்ளது. ஆனால் பெண ஒரு நேரத்தில் ஒரு கணவனுடன மட்டுமே வாழலாம். உஹதுப்போரின முடிவில் பெரும்பாலான முஸ்லிம்கள் கொல்லப் பட்டனா. அந்நிலையில் பெண்களின் எணணிக்கை ஆண்களின் எண்ணிககையை விடப பெருமளவு கூடியிருந்தது. ஒரு ஆண் ஒரு பெண்ணை மட்டும் மணக்கும போது பெருமளவு பெண்கள் திருமணம் செய்ய முடியாத நிலையிருந்தது. பலதாரமணம் என்பது குறித்த காலகட்டததிற்கு மட்டுமே பொருந்துவதாய் இருக்கிறது. இதனைப் பலர் புரிந்து கொள்வதில்லை.

ஆண் பெண்ணிடமிருந்து விவாகரத்துப் பெறவேண்டுமாயின் ஷரஅத் சட்டங்களுக்கமைய (இஸ்லாமியச் சட்ட விதிமுறைகள்) இஸ்லாமிய நீதி மன்றத்தில் எவ்வித காரணங்களையும் கூறத் தேவையில்லை. ஆனால் பெண் விவாகரத்துப் பெறவேண்டுமாயின் காரணம் கூறவேண்டும். இது ஆண்களுக்குச் சாாபானது எனப் பலா கருதுகின்றனா. விதவை மறுமணம அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஆண் விவாகரத்துக்கான காரணத்தைக் கூறும்போது அவளை மறுமணம் செய்ய எவரும் முன்வருவ தில்லை. இதனைத் தடுப்பதற்கே ஆண் காரணம் சொல்லவேண்டியதில்லை. முத்தலாக் முறை பற்றிப் பலருக்குத் தெளிவில்லை. ஒரு சந்தர்ப்பத்தி லேயே தலாக் மூன்று முறை கூறினால் விவாகரத்தாகிவிடும் என்று கருது கின்றனர். ஆனால் ஒரு சந்தர்பபத்தல் தலாக் ஆயிரம் முறை சொன்னாலும ஒரு முறை சொனனதாகவே கருதப்படும. குறிப்பிட்ட காலத்திற்கு இருவரும பிரிந்து வாழவேண்டும். காலப்பகுதி மனைவியின் நிலை பொறுத்து வேறு படும். சாதாரணமாக மூன்று மாதகாலப் பகுதியாக இருக்கும். கர்ப்பிணி யாக இருப்பின காப்பகாலம் முழுவதும் அக்காலப்பகுதி இருக்கும். இக காலப்பகுதியில் இருவரும் சேர்ந்து வாழவிரும்பினால் சேரலாம். அவ்வாறு சேர்ந்து வாழும்போது மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் தலாக் கூறின அது இரண்டாவது தலாக். முன்புபோன்று மீண்டும் சேரின் இன்னொரு சந்தர்ப் பத்தில் தலாக் கூறலாம். மூன்றுமுறை தலாக் கூறின் விவாகரத்து வழங் கப்படும். தலாக் கூறிய பின், வழங்கபபடும காலஎல்லை கடந்த பிறகு சேர விரும்பின் மீண்டும் திருமணம் செய்யவேண்டும். மூன்றாவது தலாக் கூறியபின் சேரவிரும்பின் அப்பெண்ணை வேறொரு நபர் மணம் முடித்து தலாக் கூறினாலே முதலாவது நபா மணம் முடிக்கலாம். இத்தகைய இறுக்கமான கட்டுப்பாடு மூலம் விவாகரத்து தடுக்கப்படுகிறது.

இஸ்லாமியக் கொள்கைகள் பற்றிய தெளிவின்மையே அதுபற்றிய தவறான பார்வைக்குக் காரணமாகின்றது. எனவே பொதுக்கருத்துக்களை விடுத்து அது பற்றிய தெளிவான அறிவினைப் பெறுவோம்.

*தி.ராகவன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனத்துச் சின்னக் கதை

ஆற்றில் மீன்களையும் இறால்களையும் பிடிப்பது எனக்குப் பிடித்த பொழுதுபோக்குகளில் ஒன்று. ஆற்றங்கரைக்குச் சென்று எனது செருப் புக்களைக் கழற்றி விட்டு ஆற்றுக்குள் இறங்கி மீன்களையும் இறால்களை யும் பிடித்து எனது நாளைப் பொழுதுபோக்காகச் செலவிடத் தொடங்கினேன். அதிஷ்ட தேவதை என்னுடன் இருந்தாள். ஒரு சில மணித்தியாலங்களின பின் நான் கரைக்கு மீண்டேன். மீன்களும் இறால்களும் என் கூடையை நிறைத்திருந்தன.

நான் கரையில் கழற்றிவிட்ட செருப்புக்களைச் சுற்றிச் சனம கூடியிருந்தது எனக்கு வியப்பளித்தது. ஏதோ நடந்திருக்க வேண்டும். அறியவேண்டும் என்ற ஆவலிலும் வருப்பத்திலும் என செருப்புக்களை நோக்கி விரைவாக நடையைக் கட்டினேன்.

"ஐயோ பாவம்" நீண்ட குரல ஒன்று கேட்டது. "முப்பது வயதுக்கு மேல் இருக்கும் அவள் தனது துணையைத் தேட ஆயிரம யுவானுக்கு மேல் செலவழித்திருப்பாள். ஆனால் விளைந்தது என்னவோ, தனது துணையின் குடும்பத்தினரால் தவித்து விடப்பட்டதுதான." "இங்கே பாா, இவா் இங்கே நீரில மூழகப் போயுள்ளாா்." "இல்லை, அப்படி நடநதிருக்க வாய்ப்பில்லை" என்று இன்னொருவா சொன்னாா். "இது ஒரு இளம் பெண். நீரில் மூழ்கி இறந்திருக்கிறாள். தனது காதலனால் நிராகரிக்கப்பட்ட சோகத்தில் அவள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறாள். அவலம பற்றிச் சனங்கள் முணுமுணுக்கத் தொடங்கினா்.

## ஆற்றோரமாய் ஒரு சோடி செருப்புக்கள்

மூலம் : லியு ஜியாங் குவா (Liu Jianhua)
தமிழில் : பகலவன்
தெரிவு செயயப்பட்ட குட்டிக் கதைகள் தொகுதி - 5.
மக்கள் வெளியீட்டு இல்லம் - 1985.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முதிய பெண் பேசத் தொடங்கினாள். "குவாவ் தியாவ் காணாமல் போய்விட்டாள் எனறு உங்களுக்குத் தெரியுமா? அவள் அவளது மருமகளால் திட்டப்பட்டும் அடிக்கப்பட்டும் துன்புறுத்தப்பட்டும் வந்தாள். கோபமடைந்த அவள் நேற்று இரவு வீட்டை விட்டு வெளியேறி இருக கிறாள். வாழ்நாள் முழுவதும் மிகக் கடுமையாக வேலை செய்த அவளின் இறுதி வீடாக இந்த ஆறுதான் இருக்கும் என்று யாரும் நினைத்துக கூடப் பாாத்திருக்க முடியுமா?" சனக்கூட்டத்தின் மத்தியை நான் அடைந்த போது மிகுந்த குழப்பமாய் இருந்தேன். இறந்த சடலம் ஒன்றின் அறிகுறியே அங்கு தெரியவில்லை. புகைந்து கொண்டிருந்த வயிறு நேரம் கடந்தும் உண்ணாமல் இருக்கின்ற மதிய உணவை ஞாபகப்படுத்தியது. எனது செருப்புக்களை மாட்டிக்கொண்டு அந்த இடத்திலிருந்து நான் நடக்கத் தொடங்கினேன்.

நான் அதிசயிக்கும் விதமாகச் சனக்கூட்டம் மிக விரைவாக கலையத் தொடங்கியது. கூடியிருந்தவர்கள் தங்கள வேலையைப் பாாக்கவோ அல்லது அவ்விடத்திலிருந்து விலகிச் செல்லவோ தொடங்கினா. ஆக அதுதான் உண்மையான கதை என முணுமுணுத்தபடி. ஒரு சிலா என்னை நோக்கிக் கவலை தோய்ந்த பரிதாபப் பார்வையை வீசியபடி சென்றார்கள். எனக்கோ அழுவதோ சிரிப்பதோ என்று புரியவில்லை.

திடீரென்று நான் எனது செருப்புடன் மட்டுமல்ல அவர்களது கிசுகிசுப்புகளுக்குக் காரணமான மூலத்துடன் அங்கிருந்து நடந்து கொண்டிருக்கிறேன் என்று எனது உள்மனது சொல்லியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிரப்பப்படாத வாக்குப்பெட்டிகள்

"வணக்கம்!

தலைப்புச் செய்திகள்.......

முடியாட்சியிலிருந்து குடியாட்சிக்குத் திரும்பிய போது நடைபெற்ற முதலாவது தோதலில் மக்கள் ஆாவத்துடன் கலந்து கொண்டனா. 98% இற்கும் மேற்பட்டோர் வாக்கெடுப்பில் கலந்து கொண் டனர்."

இது எத்தனையோ நாடுகள் காலனித்துவத்திலிருந்து விடுபட்ட போதும், முடியாட்சியிலிருந்து குடி யாட்சிக்குக் காலடி எடுத்து வைத்த போதும காணப்பட்ட நிலைமை. ஆனால் ் றைய தேர்தல்களில இத்தகு நிலைவரங்கள் காணபபடுகி றதா எனக் கேட்டால் இல்லை என பதே பதில்.

தோதல் என்பது ஒரு நாட் டில் நிலவும் ஜனநாயகத்தை வெளி ப்படுத்தும் கருவி. ரூசோவின் மக்க ளால மக்களற்கான மககளாட்சியைக் காட்டும் கண்ணாடி. ஆனால் இது எதுவாக இருந்தாலும் இப்போதெல லாம் தோதல்களில் மக்களின் ஆா வங்குறைந்து வருவது மறுதலிக்க முடியாத யதாாத்தம். தோதலின்போது சில வாக்குச்சாவடிகள வெறித்துக் காணப்படுவதும் உண்டு. இத்தகு நிலைமை ஏற்படுவதற்கான காரணம யாது?

ஒரு நாட்டில் பல்வேறு வகையான தோதல்கள் மாறி மாறி நடைபெறுகின்றன. எமது நாட்டை எடுத்துக் கொண்டால் ஜனாதிபதித தேர்தல், பாராளுமன்றத தேர்தல், உள்ளூராட்சித் தோதல், மாகாண சபைத் தோதல் என நண்ட பட்டியல உண்டு. சில சமயத்தில் ஒரு வரு டத்தில பல தேர்தல்கள் இடம்பெறு வதும் உண்டு. இவ்வாறான சந்தர்ப பத்தில் மக்களின் நாட்டம் குறைவது இயல்பானதே. மேலும தேர்தலில பங்கேற்பதால் எவ்வித மாற்றமும் நாட்டில் ஏற்படப் போவதில்லை, கள்ளவோட்டுகளையோ, மோசடி களையோ தவிர்க்க முடியாது. இத னால் வாக்களிப்பல் எந்தப் பயனு மில்லை எனற சலிப்பும் மக்கள் மத் தியில் காணப்படுகிறது.

இத்தகைய சலிப்பிற்கான காரணங்களில் தேர்தல முறைமை யில உள்ள குறைபாடும் தோதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் இடம்பெறும் மோசடிகளும பெரும பங்கு வகிக்கின்றன. ஜன நாயகத்திலே அனைவரது கருத்து க்களும் எண்ணங்களும் பிரதிபலி க்கப்படுதல வேணடும. அபபோது தான் அங்கு சிறந்த ஜனநாயகம பேணப்படும. ஆனால அத்தகைய ஜனநாயகத்தின் கருவியான தேர் தலில் இது சாத்தியமா என்பது கேள்விக்குரியதே. விருப்பதேர்வு களுக்கு முக்கியத்துவம் கொடுககும வாக்குச் சீட்டானது ஒருவனது எதிா ப்பை வெளிப்படுத்துவதற்கு வழி வகுப்பதில்லை.

உதாரணமாக A,B,C என மூன்று போகள் போட்டியிடும் தேர் தலில் மூவரில் ஒருவருக்கான விருப பத்தெரிவை வெளிப்படுத்துவதற்கே வாய்ப்பு வழங்கப்படும். ஏதேனும் ஒரு வாக்காளனிற்கு மூவரில எவருக்கும வாக்களிக்க விருப்பமில்லை என் றால் அவன் தனது விருப்பத்தை எப்படி வெளிப்படுத்தலாம்.

தேர்தலில் வாக்களிக்கா மல தவிாப்பது அவனது கருத்தை வெளிப்படுத்துவதாகாது. தனது வாக்கை நிராகரிக்கப்படும் வாக்காக செலுத்துவது தேர்தல கணிப்பிலிரு ந்தே குறித்த வாக்கினை அகற்றும். எனவே இப்பிரச்சனை களையப்பட வேண்டுமாயின தேர்தலுககான எதிர்ப்பைக் கொண்டவர்களின எண்ணத்தை வெளிப்படுத் தவும் சந்தர்ப்பம் அளிக கப்பட வேணடும். ரஷ்யாவின் தேர்தலமைப் பில் இந் நடைமுறை பின்பற்றப் படுகிறது.




மேலும ஒட்டுமொத்தமாக தோதல் என்பதை நோககினால் கூட அதன மீதான நம்பிககையை மக்கள இழந்துவி ட்டனா எனலாம். தோதல் நாட்களில் வெளியே சென்று தோத லில் பங்கேற்பதைவிட விடுமுறை நாளை வட்டில் இருந்து ஓய்வு எடுக கவே விரும்புகின்றனர்.

எவ்வாறாயினும் தேர்தலில வாக்களிப்பது என்பது ஒருவனின அரசியல உரிமை. அதுமட்டுமன்றி அரசியல அமைப்பினால் ஏற்றுக்கொ ண்ட மறைமுக அடிப்படை உரிமை யும் ஆகும். இலங்கை அரசியல அமைப்பில சரத்து 14(1)a ஒருவ னுடைய கருத்துரிமையை அடிப படை உரிமையாக ஏற்றுக்கொள கிறது. தோதலில் வாக்களித்தல என்பது கருத்து வெளிப்படுத்தும செயலே. ஆதலால் தமது கருத்து வெளிப்பாடானது மாற்றங்களை ஏற்படுத்தவில்லை என்ற போது தேர்தல் மீதான நம்பிக்கை இழப்பு தவிர்க்கப்படமுடியாத ஒன்றே.

-தீரா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கட்டுரை

# MICHAEL JACKSON: ANTI-GRAVITY INVENTOR

பொப் உலகை ஆட்டிப்படைத்த Michael Jackson ஆல் Bad அல்பத்தினை ஆதரிக்க ஒக்டோபர் 24, 1988இல் வெளியிட்ட ஒரு பாடலே Smooth criminal ஆகும். இப்பாடல் வீடியோவில் 45 கோண அளவில் சாய்ந்த நிலையிலான ஒரு நடன அசைவு கொழுக்கிகள், கயிறு, காந்தம் கொண்டு மேற்கொள்ளபபட்டது.

பின்பு இதனை எவ்வாறு வெளியரங்கில் மேடைநிகழ்ச்சியாக நிகழ்த்தலாம் என்ற சிக்கலுக்கு Jackson மற்றும் குழுவினர் தள்ளப் பட்டனர். அதற்கு அவர்களே முடிவு கண்டு மேடையி லும் நிகழ்த்தினர். மேடையில் நிகழ்த் தியபோது இது வோர சாகசமாக பலரால் பார்க்கப பட்டது. இதற்குக காரணம் பௌதிக வியல் விதிகளின் படி anti-gravity





lean நடன அசைவின்போது ஈர்வைமையம் கால்களைவிட விலத்தி யிருந்த போதும் Jackson மற்றும் அவரின குழுவினரால கவிழாமல எவ்வாறு மேடையில் 45 அளவில் சாயமுடிந்தது என்பதேயாகும். இதற்கு விளக்கமாக Jackson Michael.J, Bush Michael L. Tompkins Dennis என்போரை கண்டுபிடிப்பாளராக குறிப்பிட்டு 1993 இல் U.S. Patent No. 5,255,452யின்படி விளக்கம் மற்றும் வரை படங்கள வெளி யாயின.

இதில் வெளியானதன சுருக்கமாவது விசேடமாக தயாரிக்கப் பட்ட பாதணிகளின உதவியுடன இவ்வாறன நடன அசைவு மேற் கொள்ளப்பட்டது என்பதேயாகும். அதாவது ஒரு Boots இதற்கென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jacksonஆல் சொல்லி வைத்து தயாரிக்கப்பட்டது. இதில முக்கிய மாக இதன் Heel பகுதி உலோகத்தால் ஆக்கப்பட்டது. இவ் heel பகுதியில குழியமைப்புடன கூடிய ஒரு V அமைப்பிலான ஒரு வெட்டு காணப்படும். இதனுள் செருகுவதற்கு வசதியாக மேடையில கீழ புறமிருந்து லாவகமாக மேலெழுப்பக்கூடிய ஆணித்தலை போன்ற அமைப்பு ஏற்கனவே பொருத்தப்படிருக்கும். எனவே சரியான பொழு தில் இவ் ஆணித்தலை மேல் நகர்த்தப்படும. பின்னர் இவ் ஆணித தலை சரியாக Heel பகுதியின V யினுள் செருகியபின நாமாகவே முன் சாய்ந்து இந்நடன அசைவை மேற்கொள்ளளாம. வழக்கமாக Jacksonஇன் மேடை நிகழ்ச்சிகளில சட்டென spotlight அணையும் உடனே Jackson குழுவினர் பாதணி V பகுதியை சட்டென ஆணித் தலையுடன் செருகிக் கொள்வர். பின spotlight எரிய, அவர்கள் சாய்வர் பின்பு லாவ கமாக பாதணிகளைப் பின் நகர் த்து பிடியிலிருந்து விடுவிப்பர். உடனே கீழிருந்து நகர்த்தப்பட்ட ஆணித் தலைகள் மறுபடியும மேடையினுள் இழுக்கப்படும்.



இதில் முக்கியமாக இவ் Boot இனைக்கூட ஒரு சாதரண Jacksonஇன் நடன பாதணியாக தோன்றுவதற்கேற்றவாறு மேற் பொருத்தல்கள் பொருத்தப்பட டிருக்கும். அத்துடன் இப் patent 29 ஜுன் 2012 உடன முடிவ டைவதாக ஒரு தகவல தெரிவி ப்பினும் இன்னுமொன்று, maintenance கட்டணம் செலுத்தா மையால் 2005ல் முடிவடைந்த தாகவும் கூறுகிறது. எது எப்படியோ இவ் நடன அசைவால் Jackson பல இதயங்களைக் கவர்ந்தார என்பது மட்டும் உண்மையாகும்.

ப. கிரிகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை



"சனியனுகள் இந்த இலையானுக்கு மருநதடிக்க மாட்டாஙகளா?..." மேசை மீது மொய்த்த இலையான்களைக் கலைத்தபடியே அலுத்துக் கொண்டார தினேஸ் அண்ணா. சீனியர் எண்ட மரியாதை, கொழும்புக்குப் புதுமுகம் எல்லாஞ்சேர்ந்து என்னைப் பம்மிக் கொண்டு இருக்கச் செய்தன. அதை விட ராகிங் பயம் வேறு. நல்ல காலம் தினேஸ் அண்ணை இன்னும் ஏடாகூடமாகக் கதைக்கத தொடங்கவிலலை. சொந்தக்காரப பெடியனென்டோ அல்லது என்ட அப்பாட்டப் படிச்ச மரியாதையோ தெரியாது, அவர் என்னை ராக் பண்ணயில்லை. அதோட ராக பண்ண வந்த அவற்ற பட்ச்மேட் பெடியளையும் ராக் பண்ண விடயில்லை. அந்த நிமமதி இருந்தாலும் உள்ளூற ஏதோ ஒரு பயம், அமைதியினமை இருந்துகொண்டே இருந்தது. ராமகிருஸ்ணா சாப்பாட்டுக் கடையின் பினனேர கிறவுட்டைச் சமாளிக்க வெயிட்டர்கள் திண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

ஓடிக்கொண்டிருந்த ஒரு வெயிட்டரை மறித்து சோட்ஈட்ஸ் கொணடு வாங்கோ எண்டு ஓடர் குடுத்தார் தினேஸ் அண்ணா. கேட்டுக்கொண்டு திரும்பியவனைத் திரும்பக் கூப்பிட்டு இரண்டு டீயும் எண்டு தனது இரு விரலைக் காட்டியபடியே சொன்னார். வெயிட்டர் தலையை ஆட்டிவிட்டுத தன் ஓட்டத்தைத் தொடர்ந்தான்.

நான் வழமையா தமிழ்க்கடையள்ள சாப்பிடுறேல்லை. சிங்களக கடையள்ளையும் முஸ்லிம் கடையள்ளிலையும் தான் சாப்பிடுறனான். இஞ்ச தமிழ்க்கடையள்ள கண்டவன் நிண்டவன் எல்லாம் சாப்பாடு போடுவான். எனக்கு உதுகள் சரிவராது. உனக்குச சிங்கள முஸ்லிம சாப்பாடுகள் பிடிக்காது. அதான் இஞ்ச கூட்டிக் கொணடு வந்தனான். எண்டார் தினேஸ் அண்ணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு விளங்கேல்ல, தமிழ்க கடையள விட சிங்கள, முஸ்லிம் கடையள் சுத்தமா இருக்குமோ சர எனிமேல் நானும சிங்கள முஸ்லிம கடையளுக்கு போவம். தமிழ் கடையளைக் குறைப்பம எண்டு முடிவு கட்டிக் கொண்டேன். ஏழு வருசமா கொழும்பிலை அடிபட்ட மனுசன காரணம் இல்லாம சொல்லாது.

ஏ எல் றிசல்ட் வந்த உடனேயே எனக்குக கொழும்புப பயம், ராக்கிங் பயம் எண்டு ஆயிரத்தெட்டு பயங்கள பிடிச்சிட்டுது. அதுக்கு முதல் நான் பளையைக கூடத் தாண்டிப போனதில்லை. அப்பா தான் ஆரையோ தேடிப்பிடிச்சு தினேஷ் அண்ணாவிண்ட நம்பரை எடுத்து கதைச்சு என்னை ரிசீவ் பண்ணவும், இந்தக் கொழும்பு பழகும் வரைக்கும உதவி செய்யவும் தினேஸ் அண்ணாவை ஏற்பாடு பண்ணினவர். தினேஸ் அண்ணை தூரத்துச சொந்தம்தான். தொடுசல் கொஞ்சம் குறைவு.

தினேஸ் அண்ணை போன இயரில்த்தான பாஸ்அவுட் ஆகி ஏதோ ஒரு மல்டி நேஷனல் கம்பெனியில நல்ல சம்பளத்துக்கு வேலை செய்கிறார். அவற்ற அப்பா, அம்மா எல்லாம் வன்னியில. சொந்த இடம யாழ்பபாணம்தான். பிறகு வன்னிக்குப போனவை. வீட்ட காசு அனுப்பேலாமக கிடக்கு எணடு கவலையாச் சொன்னவர்.

"அடேய் முதல் வரிசம ஒழுங்காப படிச்சு நல்லா ஸ்கோர் பண்ண! நல்ல பீல்டுக்க போய்ட்டு அங்கால விளையாடலாம." "ஓம அண்ணா" நான் கனக்கக் கதைப்பதில்லை- பயம். தினேஸ அண்ணாவின ஹாண்ட போன அடித்தது.

எடுத்துப் பார்த்து "இவனோட ஒரே கரைச்சல்" எண்டு முணு முணுத்துக கொண்டே எழும்பிப போய, கொஞ்சம தள்ளி நிண்டு கதைக்கத் தொடங்கினார்.

ஆரோ அவருக்குப் பிடிக்காத ஆக்கள் போலக் கிடக்கு. அது தான் முணுமுணுத்துக் கொண்டே போகிறார் எண்டு நினைச்சன். ஆனால அது பிழை எண்டு பிறகுதான் விளங்கிச்சுது. அங்கால போய் நிண்டு அன்பொழுக சிரிச்சுச் சிரிச்சுக் கதைச்சார்.

## கண்டவன் நிண்டவன்

ச.சுதாகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசி வயிற்றைக் கிள்ளியது. ராமகிருஷ்ண கடையின வடை வாசம் அதற்குத் தூபம் போட்டது. ஒவ்வொரு தரமும் வெயிட்டர் கடந்து போக அவனது முகத்தைப் பரிதாபத்துடன பார்த்துக் கொண்டேன்.

“கொஞ்சம பொறுங்க சுருககாத் தாரன” எண்டு சொல்லிக்கொண்டு ஓடிப்போய் ரண்டு டீயைக கொண்டு வந்து வைத்தான். பிறகு ஒரு தட்டைக் கொண்டு வந்து வைத்தான். அதில் போண்டா வடை எனப்பல இருந்தன. “சம்பல் வேணுமா” என்றான் என்ன சொல்வதென்று தெரியவில்லை. தினேஸ அண்ணா இன்னமும பிசியாக அளவளாவிக் கொண்டிருந்தார். எதுக்கும் இருக்கட்டும என்று தலையை ஆட்டி வைத்தேன்.

இரண்டு தட்டைக் கொண்டு வந்து வைத்து அதில பச்சை, சிவப்பு என இரணடு வகை சம்பல்களைப் போட்டான். அதில் பசி இன்னும கூடியது.

தினேஸ் அண்ணையைத் திரும்பிப் பார்த்தேன. அங்கிருநதே என்னை சாப்பிடுமாறு தலை ஆட்டினார்.

டீயை எடுததுக் குடிக்க ஆரம்பித்தேன. வடையைத் தொடவிலலை. எதுக்கும் அவரும் வரட்டும்.

ஒரு கையில வடையை மொய்க்கத் தொடங்கிய இலையான்களைக் கலைத்துக் கொண்டே மெல்ல மெல்ல டீயைக் குடித்தேன்.

அரைவாசி டீ குடித்து முடிந்த போது தான் தினேஸ் அண்ணா போன் கதைத்து முடித்து வந்து சேர்ந்தார். கதிரையில் இருந்தபோது அவர முகத்தில் ஒரு வெறுப்புத் தெரிந்தது வெயிட்டைரக் கூப்பிட்டு தனது டீயைக் காட்டி “எனக்கு கிளாசில வேண்டாம் கப்பில கொண்டு வா” எண்டார். அவனும் பதிலேதும் கூறாமல் டீயை எடுத்துக்கொண்டு சென்றான்.

“ஊரில நாங்கள் சாதி குறைஞ்ச ஆக்களுக்குத தான கிளாசில குடுக்கிற நாங்கள். அதுதான் எனக்கு கிளாசில குடிக்கிறது எண்டாலே அரியண்டம் மாதிரி.”

இப்பத் தான் எனக்கு “கண்டவன் நிண்டவன்” எல்லாம் ஆர் எண்டு புரிந்தது.

மிச்சமிருந்த டீயை ஒரே மடக்காகக் குடித்து விட்டு “டொக்” என்று க்ளாசை மேசை மீது வைத்தேன்.

***

**“எவன் ஒருவன் மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படுகிறானோ அவனே விரும்பப்படுகிறான். வெற்றி அடைகிறான்.”**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டப் பெருவெளியில்

# புகைமங்கள் / ஒண்முகில்கள்

நாம் இரவு வானில் அவதானிக்கக்கூடிய அழகானதும் பல்வேறு வர்ணங்களில் தெரிகின்றதும், அண்டத்தினுடைய பூக்கள் என்றும வர்ணிக கப்படுகின்ற பொருட்களைப் பற்றியே இம்முறை அவதானிக்க இருக்கிறோம். முகில் எனும் கருத்தைத் தரக்கூடிய இலத்தீன் மொழியிலிருந்து பெறப் பட்ட சொல்லாகிய Nebula(புகைமம்)இனாலேயே அழைக்கப்படுகின்றன.

தொடக்ககால விண்ணியலாளர்கள் பூமியின வெள்ளுடுத்தொகுதிக்கு



அதாவது பால்வீதிக்கு, வெளியே மீத் தொலைவிலுள்ள வெள்ளுடுத்தொகுதி களைக் குறிக்கவும் இச்சொல்லைப் பயன் படுத்தினர். உடுத்தொகுதிகளுக்கு இடை யில் புகார் ஒளிப்பொட்டுகளாகத் (hazy patches of light) தெரிந்த இவற்றைப் பால்வீதிக்கு வெளியிலுள்ள புகைமங்கள் (extragalactic nebulae) என்றழைத்தனர். எனினும் நவீன தொலைகாட்டிகளின் உதவியுடன் இவை புகைமங்களல்ல, பால்வீதியை ஒத்த உடுத்தொகுதிகள் (systems of stars) என்று நிரூபிக கப்பட்டது. தற்போது பால்வீதியிலும் மற்றைய உடுத்தொகுதிகளிலுமுள்ள தூசுதுணிக்கைகளாலும் வாயுக்களாலுமான முகில்களைக் குறிக்கவே புகைமம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இவற்றை அண்டத்தின அடிப்படைக்கட்டடங்கள் (basic building blocks) என்றும் கூறலாம். ஏனெனில் சூரியத்தொகுதிகளும் உடுத்தொகுதிகளும் உருவாக்கப்பட்ட மூலகங் களையே புகைமங்களும் கொண்டுள்ளன. இரவுவானில் பிரகாசமான சிவப்பு, நீலம், பச்சை போன்ற நிறங்களில் இவை மிளிர்வதற்கான காரணம் இவற்றிற்கிடையிலுள்ள உடுக்களாகும். இப்புகைமங்களிலுள்ள மூலங்களின் அடிப்படையிலேயே இவற்றின் நிறங்களும் தீர்மானிக்கப் படுகின்றன. இவை பெருமளவு ஐதரசனையும் சிறிதளவு ஈலியத்தையும் மிகச்சிறிதளவு திண்ம மூலகங்களையும் கொண்டுள்ளன. புகைமங்கள் ஒளிர்வதற்கேற்ப பராவல் புகைமங்கள் (diffuse nebulae), கோளப் புகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கள் (planetary nebulae), பறந்தலை மீதிகள் (super-nova remnants), இருட்புகைமங்கள் (dark nebulae) என நான்கு வகையாகப் பிரிக்கப் படுகின்றன. எனினும் சிலர் இருட்புகைமங்களை பராவல் புகைமங் களுக்குள் அடக்கி மூன்று வகை எனக் காட்டுவர்.

*பராவல் புகைமங்கள்*

பராவல் புகைமங்கள் மிகப் பரந்ததும் குறித்த எல்லைகளைக குறிப்பிட முடியாததுமாகும். கட்புலனாகும் ஒளியில் இவை காலல் புகை மங்கள் (emission nebulae), தெறிப்புப் புகைமங்கள் (reflection nebulae) என்று அவை வெளிவிடும் ஒளி உருவாக்கப்படுவதற்கேற்ப இருவகையாக வகைப்படுத்தப்படும்.



*1. காலல் புகைமங்கள்*

இது உயர் வெப்பநிலையிலுள்ள வாயுவைக் கொண்ட முகிலாகும். உடுக்கள் கழி ஊதாக் கதிர்ப்பினால் (ultraviolet radiation) இப்புகைமத்தின் முகிலுக்குள உள்ள அணுக்களுக்கு சக்தியை வழங்கும். இவ்வணுக்கள் மீண்டும் குறைந்த சக்திப் படிகளுக்குச் (energy states) செல்லும்போது கதிர்ப்பைக் காலும். இது புகைமத்தை ஒளிரச் செய்யும். காலல் புகைமங்களில் உள்ள அளவுக கதிகமான ஐதரசனின் காரணமாக இவை சிவப்பு நிறத்தையே காடடும். Orion nebula (M42) காலல் புகைமத்திற்கான சிறந்த சான்றாகும்.

*2. தெறிப்புப் புகைமங்கள்*

இது பெயருக்கேற்றாற்போல் சுயமாக ஒளியைக் காலாது அயலி லுள்ள உடுவிலோ அல்லது உடுத்தொகுதியிலோ இருந்து வரும் ஒளியை அதனிலுள்ள தூசுதுணிக்கைகளாலும் வாயுக்களாலும் தெறிபபடையச் செய்கின்றன. ஒளி தெறிப்படையும்போது அதிக விலகலைக் காட்டாத நீல நிறத்திலேயே இவை காணப்படுகின்றன. Pleidas, Witch Head ஆகியன மிக அழகான நீல நிறத் தெறிப்புப் புகைமங்கள் ஆகும்.

*கோளப் புகைமங்கள்*

ஒரு உடு அதன் அழிவை நெருங்கும்போது வெளிவிடும் shell of gas கோளப் புகைமங்கள் எனப்படும். இவை அமைப்பில் கோள வடிவைக் கொண்டதால் கோளப் புகைமம் என்ற பெயரைப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுக்கள் அவற்றின் அழிவை நெருங்கும்போது பூத உடுவின் (giant star) நிலையை அடையும். இப்பூத உடுவின் மையப்பகுதி சில ஆயிரம் ஆண்டுகளில் உடு இடை ஊடகத்தில் (inter-stellar medium) குளிர வடைந்து வெள்ளக்குள்ளியாக (white dwarf) மாறலாம். Lyra* இலுள்ள ring nebula(M57) இதற்குச் சிறந்த சான்றாகும்.

பராவல் புகைமங்கள் எமது சூரியனின் அளவைப் போன்ற 100,000 உடுக்களை உருவாக்கக்கூடிய அளவு தூசுதுணிக்கைகளையும் வாயுக்களையும் கொண்டுள்ளன.

### பறந்தலை மீதிகள்

ஒரு சில உடுக்கள் அழியும்போது பெருவெடிப்பை உண்டாக்கும். Supernova explosion என்றழைக்கப்படும் இவ்வெடிப்பின் பின்னரே இவை உருவாக்கப்படும். இப்பெருவெடிப்பின் காரணமாக உடுவின் பெருமளவு பொருண்மங்கள் அண்டவெளியினுள் தள்ளப படும். இப்பொருண்மங்களைக கொண்ட முகில், அது தோன்றுவதற்குக் காரணமாக இருந்த உடுவின் மீதிகளைக் கொண்டு துலக்கம்(glow) அடையும். Taurus* இலுள்ள crab nebula (M1) இவ்வகையைச் சார்ந்ததாகும்.



### இருட்புகைமங்கள்

இவை தமக்குப் பின்னாலுள்ள உடுக்களிலிருந்து வரும் ஒளியை மறைக்கும் இயல்பைக் கொண்டுள்ளன. அமைப்பில் தெறிப்புப் புகைமங் களை ஒத்திருக்கும் இவ்விருட்புகைமங்களை வழக்கமாக காலல், தெறிப்புப புகைமங்களுடன் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். Orion* இலுள்ள horse head nebulaவும், தென்சிலுவையிலுள்ள (southern cross*) coalsack nebulaவும் இருட்புகைமத்திற்கு மிகவும் பிரசித்தி பெற்ற உதாரணங்களாகும்.

* வானில் அவதானிக்கக்கூடிய ஒரு ஒழுங்கைக் காட்டுகின்ற உடுக் களின் கூட்டம் constellation எனப்படும். IAU (International Astronomical Union) இனால் 88 constellations பிரிக்கப்பட்டுள்ளன. Lyra, Taurus, Orion, தென்சிலுவை என்பவை இவற்றில் சிலவாகும்.

வானவரம்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயில்நிலத்தின் தோற்றுவாயின் ஊற்றுக்கண

**(முருகையன் எனும் முடியா நெடும்பகல - நினைவு மலரில் வெளிவந்த அஞ்சலிக்குறிப்பு)**

முருகையன் என்ற அற்புதமான மனிதரை அவரது எழுத்துக்கள் மூலமும் கவிதை மூலமுமே பயில்நிலம் அமைப்பினரான நாம் அறிவோம். பயில்நிலத்துக்கும் முருகையனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தேசிய கலை இலக்கியப் பேரவையின் காலாண்டு சஞ்சிகையான தாயகம் இளை யோருக்கான ஒரு தனிப்பகுதியைத் தொடங்க விரும்பிய போது கவிஞர முருகையன் அவர்கள் "பயில்நிலம்" என்ற பெயரை அதற்கு வழங்கினார். இளையோருக்கான ஒரு தனிச் சஞ்சிகையாகப் பயில்நிலம் தொடங்கப்பட்ட போது பயில்நிலம் என்ற பெயரையே நாம் அமைப்பின பெயராகவும், சஞ்சிகையின் பெயராகவும் வைத்துக் கொண்டோம்.



சமூக விடுதலையை வேண்டுவோர் கலை இலக்கியங்கள் சமூகச் சார்புடையனவாக இருப்பதை விரும்புவர். மனிதரின் உரிமை களையும் மனிதரிடையே சமத்துவ அடிப்படை யிலான ஒற்றுமையையும் நீதியையும் நியா யத்தையும் அவற்றுக்கான எழுச்சிகளையும பேசுவதை வற்புறுத்துவர். அந்த இலக்குடைய படைபபாளிகள் அவற்றை உணர்த்துகிற விதமாகக் கலை இலக்கியங்களை உருவாக்குவர. இவ்வாறு பேசியும எழுதியும் வாழ்ந்தும வந்தவர் கவிஞர் முருகையன். அவர் இளைய தலைமுறைப படைப்பாளிகளை ஊக்குவிப்பதில் அவர்களுக்கான சந்தர்ப்பங்களை வழங்கு வதில் என்றுமே பின்னின்றதில்லை. பயில்நிலம் தொடர்ந்து வரவேண்டும் என்பதிலும் புதிய இளையவர்கள் தொடர்ந்து செயற்பட வேண்டும் என்பதில எப்போதுமே அக்கறையாக இருந்தவர். பயில்நிலம் அமைப்பாகச் செயற்படத தொடங்கி இரண்டு இதழகளை வெளிக்கொணர்ந்த உடனேயே பயில்நிலம் அமைப்பின் பாடலை எமக்கு எழுதித் தந்து பயில்நிலத்தின் வளர்ச்சியில் பெரும்பங்கு ஆற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதத் தேவைகளையும் உணர்வுகளையும் புறக்கணித்துக் கலை இலக கியங்களைப் படைக்க முடியாது. இந்தத் தேவைகளையும் உணர்வுகளையும் தனிமனிதருக்கே உரியனவாக்கி மனிதரைச் சமூகத்தினின்று பிரித்துத் தனிமனிதத துவத்தைச் சமுதாயத்துக்கு முரண்பட்டதாக வளர்க்கும்போக்கு மனித இருப்பின முக்கியமான ஒரு பகுதியை மறுக்கிறது என்பதை அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். மொழிபெயர்ப்பு முயற்சிகளில் நாம் இறங்கியபோது முருகையனின 'மொழிபெயர்ப்பு நுட்பம் ஓர் அறிமுகம்' என்ற நூல மிகுந்த பயனுள்ளதாக இருந்தது. அந்த நூலின் எளிமையான நடையும் விளங்கவைக்கும் பாங்கும் அவரது ஆளுமையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இலங்கையில் சமூக உணர்வுள்ள இலக்கிய எழுச்சியில் மட்டுமன்றிப் பொதுவான இலக்கிய எழுச்சியிலும் இடதுசாரிகளும் பிற முற்போக்குச் சிந்தனை யாளர்களும் ஒரு தலைமைப் பங்காற்றினர். அதில் முருகையனின் பங்கும முக்கியமானது. இன்றைய நிலையில் முருகையன் எழுதிய வரிகள் தான் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வருகின்றன.

*'வெளியார் குறுக்கீடு' என்ற பண்டம் பற்றிய பரிசீலனைகள் இன்னும் பற்பல தளங்களிலும் களங்களிலும் வைத்து மீண்டும மீண்டும் செய்யப்பட வேண்டியவை. இதனை நாம் நிகழ்கால வரலாறு என்னும ஆசானிடம் தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கிறோம்."*


முருகையன் தனது வாழ்நாள் முழுவதையும மக்களுக்காக அர்ப் பணித்தவர். மக்களோடு இருந்தவர். சமூகமாற்றத்துக்கான பாதையில் தனது படைப்புகள் ஊடாக தொடர்ந்து இயங்கியவர். *"கலைகள் என்பது வெற்று வெளியிலே தோன்றி, அந்தரத்தில் நின்று நிலைப்பவை அல்ல. ஓரளவுக காயினும் உறுதியும் சமநிலையும் கொண்ட சூழலிலேதான் கலைகள் செழித் தோங்கி வளர்ந்து நிலைக்க முடியும். அவ்வாறான சூழ்நிலைகள் எப்போது தான் வருமோ? தளராத தன்னம்பிக்கையோடு இடையறாது முயல்வதுதான ஒரே ஒரு வழி"*, என்று அவர் ஒரு சமயம் சொன்னது போல தன்னம்பிக்கை யோடு தொடர்ந்து முன்செல்வதே ஒரே வழி.

முருகையன் எனும் அற்புதமான மனிதரை அவரின் படைப்புகளினூடு பயில்நிலம் என்றுமே வாழவைத்துக் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் புதிர் –03




**மேலிருந்து கீழ்**

1. சர்வதேச நெல்லாராய்ச்சி நிலையம் அமைந்துள்ள நாடு
2. சுவிற்சலாந்தின புகழ்பெற்ற நகரங களில் ஒன்று (தலைகீழ)
3. இந்தியாவில் தலயாத்திரைகளுக்காகப் புகழ்பெற்ற மலைகளில் ஒன்று
4. மோனாலிசா ஓவியத்தை வரைந்தவா
5. "சிலுவையில் தொங்கிய சாத்தான்" என்ற நூலை எழுதியவர்
9. சிறுவா காமிக்ஸ் நாவல்களில் புகழ பெற்ற கதாப்பாத்திரம்
11. பங்களாதேஷின் தேசியப்பழம (தலைகீழ்)
14. வைராக்கியம் (தலைகீழ்)
15. கலப்பை
18. மத்தியகிழக்கின் புகழ்பெற்ற நாண யங்களில் ஒன்று
20. நாகணவாய்

**இடமிருந்து வலம்**

1 புஷ்பகுமாா தால இவரது இயற பெயர்
7 சமணநூலாசிரியா் மேற்கொள்ளும் ஓர் பட்டப்பெயர்
10 இலங்கையின் புகழ்பெற்ற இசை வடிவம்
12 இவ்வமைப்பின் முதலாவது கூட டம் பண்டுங்கில் நடைபெற்றது
16 இதனை மதியால் வெல்லமுடியும
20 அளவளாவுதல

**வலமிருந்து இடம்**

6 வேதங்களில் யாகங்களிற்குப பயன்படுத்தப்பட்ட விலங்காக இது கூறப்படுகிறது
8 குதிரையை குறிப்பது
13 இளவெருதுவைக் குறிக்கும்
19 சிறிதான் தன்மையைக் குறிக்கும
21 மனங்குன்றல், வளைதல், கொள் ளல் என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்

சரியான விடையெழுதி அனுப்புவோரில் குலுக்கல் முறையில் தோ்ந்தெடுக்கப்படும் மூவருக்கு முறையே ரூ500, ரூ300, ரூ200 பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் மேடை

♦ பயில்நிலம் இரண்டாவது இதழை வாசிக்கக் கிடைத்தது. இதழில விஞ்ஞானம் சம்பந்தமான கட்டுரைகள் அதிகளவில இடமபெற்றிருப பதால் அனைத்துத் தரப்பினரையும் கவனத்திற் கொள்ளவில்லையோ எனத் தோன்றுகிறது.
ராகவி - கொட்டஞ்சேனை

♦ கடந்த இதழை விடப் பக்கங்களின் எண்ணிக்கை கூட்டப்பட்டு இருக்கிறது. ஆனால் எழுத்துப்பிழைகள் மிகவும் அதிகம்.
கண்ணன் - மாத்தளை

♦ ஆசிரியர் தலையங்கம் NGOவைப் பற்றிய ஒரு வித்தியாசமான கண்ணோட்டமாக இருந்தது. பாராட்டுக்கள்.
சோதிலிங்கம் - வவுனியா

♦ இம்முறை இதழில பக்கவடிவமைப்பு மிகவும் இறுக்கமாக இருந்த படியால் வாசிக்கக் கடினமாக இருந்தது. இனிவரும் இதழகளில் இது குறித்துக் கவனம் செலுத்தவும்.
திலீபன் - மட்டக்களப்பு

♦ சென்ற இதழைவிட இந்த இதழில் அட்டைப்படத்தின தரம் பேணப் படவில்லையோ எனத் தோன்றுகிறது. மேலும் ஆக்கங்களுக்கான படங்களையும எங்கேயோ பார்த்ததுபோல இருக்கிறது. தனித்துவம பேணப்படவில்லையோ என எண்ணத் தோன்றுகிறது.
மேகலா - கொழும்பு

♦ சட்டம் தொடர்பாகப் பத்தி வருவது வரவேற்கத்தக்கது. ஒவ்வொரு விதைப்பிலும் ஒவ்வொரு விடயமாக எழுவது பயனளிக்கிறது. முயற்சிகளுக்குப் பாராட்டுக்கள்.
கிறிஸ்தோபர் - பண்டாரவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயஆளுமை விருத்தியில் ஆர்வம் காட்டும் எந்த ஒரு நபரும திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், தலைமைத்துவம் மற்றும் கட்டுப்படுத்தும இயல்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். வினைத்திறன் மிக்க திட்ட மிடுதலின் முக்கிய அம்சங்களையும் ஒழுங்கமைக்கும் செயன்முறை பற்றியும் நாம் கடந்த இதழில் பார்த்தோம். இம்முறை தலைமைத்துவம (leading) பற்றியும் கட்டுப்படுத்தும் இயல்பு (controling) பற்றியும் பார்ப்போம்.

தனிமனித செயற்பாடாக இருந்தாலும் சரி குழுச்செயற்பாடாக இருந்தாலும் சரி உங்களுக்குள ஒரு தலைமைத்துவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள. உங்களுக்குள் இரு க்கும் தலைமைத்துவம் உங்களை எந்த ஒரு சநதர்ப்பத்திலும் வழி நடத்திச்செல்லும்.

சுய தீர்மானங்களை எடுக் கப் பழகிக்கொள்ளுங்கள். எந்த வொரு தீர்மானம் எடுக்கப்படும போதும் அவ்விடயப்பரப்புப் பற்றியும அதன் பின்புலம் பற்றியும் ஆராய வேண்டும். எடுக்கப்படக்கூடிய சாத தியமான தீர்மானங்கள் எவை என பதைத் தெளிவுபடுத்தவும். அத்தீர் மானங்களால் எழக்கூடிய பின்விளை வுகளை அறிந்து தீர்மானங்கள் எடுக் கப்பட வேண்டும்.

அவ்வாறே நேரமுகாமைத்து வம், நீங்கள் நினைத்த இலக்கை அடைவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு காரியத்தை ஒப்பேற்றுமாறு ஒருவரிடம் பணிக்கப்படும் போது அந்த நபரது பதில் 'தனக்கு நேர மில்லை' என்பதாக இருக்ககூடும். எமக்குரிய நேரத்தை நாமே தான உருவாக்க வேண்டும். அவருக்கு நேரமில்லை என்பதைவிட நேரத் தைச் சரிவர முகாமை செய்து தனது பணிகளை ஒப்பேற்றத தெரிய வில்லை என்பது இங்கு கவனத் திற்குரியது.


மேலும் எந்தச சந்தர்ப்பத திலும் உங்களை நீங்களே சுய மதிப்பீட்டிற்கு (self-evaluation) உள்ளாக்கப் பழகுங்கள். அது உங்கள் பலங்களையும் பலவீனங களையும் உங்களுக்குச் சுட்டிக காட்டும். அவ்வாறே எந்தவொரு செயலையும் கட்டுப்பாட்டில வைத்தி ருக்கும் பக்குவமும் பழக்கமும் மிக மிக அவசியமாகிறது.

அடுத்து நாம சுயஆளுமை யின் அடிப்படை அம்சங்களுள் ஒன றான உளப்பாங்கு (attitude) பற்றிப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்போம. நாம் நினைத்த இலக்கை அடைவதற்கு முதலில் எமது உளப பாங்கை அதற்கேற்றவாறு தயார



படுத்த வேண்டும். வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் மட்டும இருந்தாற்போதாது. அதைச் செயற் படுத்துவதற்குரிய திறனும், ஆளுமை யும், அறிவும் இருக்க வேண்டும். எந்தக் காரியத்தில் ஈடுபடும்போதும அதற்குரிய சிரத்தை (commitment) உடன் ஈடுபடவேண்டும். விருப்பத் துடன் ஈடுபடும் எந்தக் காரியத் திலும் எமக்குச் செய்து முடித் தோம் என்ற திருப்தியும் அனுபவ மும கிடைக்கும்.

நினைத்த இலககில் பற்று, தீவிரத்தன்மை, அாபபணிப்புத்தன்மை கட்டாயம் வேண்டும். இவை தான் சரததையின் அடிப்படைககுணங்கள். இதை ஒரே வாாத்தையில் கூறினால் கடமையுணாச்சி என்பது தான் சிரத் தையின் ஆதாரக்குணமாகும். மேற சொன்ன மூன்று குணங்களும் இல் லாதவாகள்தான் த்றமைகள், வாய்ப்புகள் ஆகிய எல்லாம் இருந தும் வெற்றியைத தவறவிட்டு விடு கிறார்கள்.

மனிதர்களில் பலவகை உண்டு. அவர்களது தேவையை வைத்து அவரகளை இரண்டு பெரும பிரிவுகளாகப் பிரிக்கலாம். 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மரு ந்து' என்று இருப்பவர ள். 'பொறுப் புகள வேண்டாம், பிரச்சனைகள வேண்டாம், அதனுடன கூடவரும் வாய்ப்புகளும் வேண்டாம்' என்று எணணுபவர்கள. குடும்பம், நட்பு, ரசித்தல், அனுபவித்தல் என்று வாழ்க்கையை மெல்லிசை போலப பார்ப்பவர்கள்.

'என்னிடம் பல திறமைகள உண்டு. அவை இன்னும் சரியாக வெளிபடவில்லை. அதை ஒரு நாள உலகம் பார்க்கும். எதிலும் துணி நது செயற்படுவேன். நிச்சயம் ஒரு நாள் வெல்வேன்.' இப்படி வாழ்க கையை ஒரு சவாலாக எடுத்துக கொண்டு அதனை வெற்ற் கொள்ளத் தயாராக இருப்பவர்கள், முன் னேற்றத்தை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டவாகள் அடுத்த வகையினா.

## சுய ஆளுமை பற்றிச் சில நிமிடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும முதலில தனக்கு விசேட திறமை இருப்பதை அறிய வேண்டும். அறிந்த பிறகு அத திறமையை நன்கு கூாமைப்படுத்திக கொள்ளவேண்டும். தமது திறமை யைச் செயல் வடிவில் மாற்ற வேண டும். அதன்போது பல தடைகளை யும் சந்திக்க நேரிடலாம். தோல்வி களைத் தாங்கும் பக்குவங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். விடா முயற்சியும் கடும்பயிற்சியும் இல்லா விட்டால் தனித்தறமைகளை நமது வெற்றிக்கான ஆயுதமாக மாற்ற முடியாது.

எதை எடுத்துக் கொண்டு அதுவே தான் முக்கியம் என்று செய கிறோமோ அது தழைக்கிறது. எதில் ஆழ்ந்து செயற்படுகிறோமோ அதில் வெற்றி பெறலாம். காலம் முன்போல இல்லை. வைத்தியா, பொறியிய லாளா், ஆசிரியா என்று சில வேலை கள் மட்டுமே இருந்த காலம மலை யேறிவிட்டது. இப்போது பலவிதமான வேலைவாய்ப்புக்கள வந்துவிட்டன. எந்தத் திறமை இருந்தாலும் அதை மதிப்புமிக்க வேலையாக, சம்பாதிக கக்கூடிய வேலையாகச் செய்கிற காலம் இது.

குறிப்பிட்ட தனித்திறமைகள இருந்தால் மட்டுமே வாய்ப்பு என்கிற நிலை இப்போது இல்லை. எந்தத் திறமை இருந்தாலும் சரி, அதற்கு ஏதாவது ஒரு வாய்ப்பு எங்காவது நிச்சயம் இருக்கத்தான் செய்கிறது. ஆகையால் நாம் முதலில் செய்ய வேண்டியது நமது பலத்தைக் கணடுபிடிப்பதுதான். எதை வைத்து எந்தத் துறையில் முன்னேறலாம என்று தேடுங்கள்.

தங்களின் பலம் தெரிந்த வர்கள் எல்லோரும் தங்கள் பலத்தை முழுமையாகப் பயன்படுத்துகிறாா களா? இல்லை, பலத்தை முழுவ துமாக வெளிப்படுத்துவதில்லை. வெளிப்படுத்தினால் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். தொடர்ந்தும் வெற் றியை நோக்கிப் பேசுவோம் பயணி ப்போம்...

வ. சரண்யா

***

## குறுக்கெழுத்துப் புதிர் - 02. விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பா | ர | 2 சு | ம் | | 3 சு | 4 வி | 5 அ |
| கி | | ய | | 6 ம் | ப | ப் | க |
| 7 ஸ் | 8 க | ஸ் | 9 ம | ட | | 10 ர | வை |
| 11 தா | டை | | 12 க | கூ | ண | ம் | |
| 13 ன் | ய | 14 தி | த் | நி | | 15 பி | 16 தா |
| | 17 ர் | கி | து | | 18 க | | த் |
| 19 பி | | 20 ரி | வ | | 21 வ | ச | தி |
| ணை | | 22 கை | ம் | பெ | ண் | | ரி |

சென்ற இதழில் குறுக்கெழுத்துக்குரிய இலக்கங்கள் தவறாக அச்சிடப்பட்டமைக்கு வருந்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரை

# பன்றிக் காய்ச்சல் புதிய வைரசின் அறிமுகம்

## Novel Influenza A(H1N1)

காலத்துக்குக் காலம் கூர்ப்பு மாற்றத்துக்குள்ளான புதிய வைரஸ் களின தொற்றுக்கள் மூலமாக உலகம முழுவதும் பாரிய உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டு வந்துள்ளமை ஒன்றும் வரலாற்றில் புதிய விடயமில்லை. இது போன்றே 2009ம் ஆண்டின் புதிய வருகையான Influenza A(H1N1) வைரசின உருவாக்கம் பற்றி உலகமே குழப்பமடைந்து கொணடிரு க்கும்போதே உலகின் அநேகமான நாடுகளை இவ்வைரஸ் கடல்கடந்தும சென்றடைந்து விட்டது. இதற்கு இலங்கையும் ஒன்றும் விதிவிலக்கல்ல.




முதன்முதலில் மெக்சிகோவிலும் அதைத் தொடர்ந்து ஐககிய அமெரிக்காவிலும் சென்ற மார்ச், ஏப்ரல் மாதமளவில் இப்புதிய வைரசின தொற்று இனங்காணப்பட்டது. நோய்த்தொற்றின் வேகம் மிகத தீவிரமடையத தொடங்கியதும, உலக சுகாதார ஸ்தாபனம் உத்தியோகபூர்வமாக இவ்வைரசின தாக்கம் பற்றி இவ்வருடம் ஜூன் மாதம் 11ம் திகதி அறிக்கை விடுத்தது.

A(H1N1) வைரசால் ஏற்படுததப்படும் காய்ச்சல், இருமல், தொண்டை அழறசி, உடல்வலி, தலைவலி, களைப்பு மேலும் சில வேளைகளில் குமட்டல், வாந்தி, வயிற்றோட்டம் போன்ற நோய்க்குணங்குறிகள் சாதாரண பிடிசுரக காய்ச்சலினை ஒத்ததாக இருந்தமையாலும், உலகின் தென்னரைக் கோளத்தில் சாதாரணமாகவே வருடாவருடம் பெருமளவில் பெருகுகின்ற சாதாரண பிடிசுரம் பரவும் காலப்பகுதியில் முதலில் இனங்காணப்பட்டமையாலும இது சாதாரண பிடிசுரம் என்றே கருதப்பட்டது. ஆனால ஆய்வுகூடத் தகவல்கள் இந்நோய சாதாரண பிடிசுர வைரசினால் அன்றி புதிதான கூர்ப்புக்குள்ளான கலப்பின A(H1N1) வைரசினால் ஏற்படுத்தப்பட்டமை அறியப்பட்டது.

சாதாரணமாகப் பன்றிகளில் பிடிசுரத்தை ஏற்படுத்தும வடஅமெரிக்கன (1930ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டளவில் விவரிக்கப்பட்டது) மற்றும் யுரேசியன் (1979ம் ஆண்டு விவரிக்கப்பட்டது - ஐரோப்பா, ஆசியா ஆகிய கண்டங்களில் கூடுதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது) ஆகிய இரு வைரஸ் இனங்களின் கலப்பினமே A(H1N1) வைரஸ் இனமாகும். வடஅமெரிக்கன், யுரேசியன் ஆகிய வைரஸ் இனங்கள் மனிதரில் தொற்றுந்தன்மை அற்றவை என ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. ஆயினும் புதிதாக உருவாகிய A(HIN1) வைரஸ் மனிதரில் தொற்றி வாழும ஆற்றலைப் பெற்ற வீரியமான இனமாகும. குறிப்பாக யுரேசியன் இனத்தில் இருந்து புதிய வைரஸ இனத்துக்கு கடத்தப்பட்டிருக்கும neuraminidase எனும் நொதியத்திற்கான பரம்பரை அலகுகள் H1N1 இன் N1 (தொற்று ஏற்பட்ட கலங்களிலிருந்து ஏனைய கலங்களிற்கு வைரஸ் பெருக்கமடைய உதவுகிறது) எந்தவொரு மனிதரிலும் இதுவரையிலும் அறியப்பட்டிருக்கவில்லை. எனவே இந்நொதியத்திற்கு எதிரான பாதுகாபபு பொறிமுறைகளும் கூர்ப்பு மூலம் மனிதனில் விருத்தியடைந் திருப்பதற்கான சாத்தியங்கள் இல்லை. இதனால் வெகுசில மனிதர்களே இவ்வைரசிற்கு எதிரான யாதேனுமொரு நிர்ப்பீடனத்தைக் கொண்டிருக்கின்றனர். இதன காரணமாகவே வருடாந்தம் குறித்த காலங்களில தோன்றி மறையும சாதாரண பிடிசுரம் போன்ற தொற்று நோய்கள் போலல்லாது A(H1N1) வைரசின் தாக்கம் அதிதீவிரமாகவும் பரவல வேகம் விரைவாகவும் காணப்படுகிறது.

நோய்க் கட்டுப்பாட்டிற்கும் தடுப்புக்குமான மத்திய நிலையம Centre For Desease Control And Prevention (CDC) தொற்றுக்குள்ளான கலிபோர்னியாவைச் சேர்ந்த இரு பிள்ளைகளிலிருந்து பெற்ற வைரஸ் மாதிரிகளின் பரம்பரையலகுத் தொடர் ஒழுங்கினை ஆராய்ந்தபோது அவை மெக்சிகோவில் 150 பேரைப் பலிவாங்கியதும் 1600க்கு மேற்பட்டவர்களில நோய்த்தொற்றை ஏற்படுத்தியதுமான A(H1N1) வைரசின மாதிரிகளை ஒத்துக் காணப்பட்டது. மருத்துவத்துறையினைப் பொறுத்தவரை வைரசின் பாரம்பரிய தோற்றத்தின் அடிப்படை மூலம் முக்கியத்துவம் பெறவில்லை எனினும அதன் தோற்றம பற்றிய அறிவு விஞ்ஞானிகளிற்கு வைரசின் ஆரம்ப விருந்து வழங்கி, அதில் இருந்து ஏனைய இனங்களிற்கு இது பரவக்கூடிய சாத்தியப்பாடுகள் பற்றி ஆராய உதவலாம்.

முதலில் A(H1N1) வைரஸ தொற்று அறியப்பட்ட மெக்சிகோவின் Bernacruz மாநிலத்தின் லா க்ளோரியா (la gloria) நகரின் "Smith Field Foods" எனும அமெரிக்க நிறுவனத்திற்கு துணைநிறுவனமாக விளங்குவதும், சுகாதார மின்மைக்குப் பெயர்போனதுமான பன்றி வளர்ப்புப் பண்ணையில் இருந்து வெளியேறுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிவுகள் மூலமாகவே பன்றிகளில் இருந்து அந்நகரவாசிகளுக்கு வைரஸ் பரவியதாக அந்நகரவாசிகளும் சில பத்திரிகையாளர்களும் குற்றஞ்சாட்டி உள்ளனர். ஏற்கனவே ஆய்வாளர்களினாலும் இவ்வாறான சுகாதாரம் குன்றிய பன்றி வளர்ப்புப்பண்ணைகள் பல புதிய வைரஸ்களின் வளர்ப்பு ஊடகமாக அமையலாம் எனும் அபாய சமிக்ஞை விடுக்கப்பட்டு இருந்தது. உலக சுகாதார ஸ்தாபனம் இப்பண்ணைக்குத் தனது மேற்பார்வையாளர்களைப் பண்ணையின் சுகாதாரம் தொடர்பான விசாரணைகளுக்காக அனுப்பியிருந்த போதிலும் அத்தாபனத்தினால் விசாரணை முடிவுகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படவில்லை. எனினும் அப்பண்ணை உரிமையாளர நிகழ்த்திய பத்திரிக்கையாளர் சந்திப்பின் போது பண்ணையில இருக்கும் பன்றிகளிலோ அல்லது உத்தியோகத்தர்களிலோ பன்றிக்காய்ச்சல் வைரஸ் தொற்றுக்கான நோய்க்குணங்குறிகள் காணப்படவில்லை



எனவும் இதை "பன்றிக் காய்ச்சல்" எனக் குறிப்படுவதே பொருத்தம் அற்றது எனவும் கூறப்பட்டது. இது போன்றே A(H1N1) வைரஸ் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்ட ஆய்வாளர்கள் பன்றி வளர்ப்புப் பண்ணையில் இருந்தே மனிதர்களுக்குத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற கருது கோளுக்குச் சார்பான எந்தவிதக் கருத்தையும் உறுதியாகத் தெரிவிக்க முடியாது என மறுத்துள்ளனர்.

இவை யாவும் இவ்வாறிருக்க இவ்வருடம் ஜுலை ஒன்பதாம் திகதி வெளியான Journal of General Virology எனும் பத்திரிகையின் ஆய்வுக் கட்டுரை ஒன்றில் கூறப்பட்டுள்ள ஜெர்மானிய ஆய்வாளரான Dr .Thomas Vahlenkamp அவர்களும், அவரது குழுவின்தும் ஆய்வு முடிவுகளின்படி தற்போது மனிதரில் தொடருகின்ற A(H1N1) வைரஸ் மாதிரிகளால் பரிசோதனைக்காக தொற்று ஏற்படுத்தப்பட்ட பன்றிகளிலிருந்து நான்கு நாட்களுக்குள் ஏனைய மூன்று ஆரோக்கியமான பன்றிகளுக்குத் தொற்று ஏற்பட்டது உறுதி செய்யப்பட்டது. ஆயினும் அவற்றுடன் அடைத்து வைக்கப்பட்ட ஐந்து கோழிக்குஞ்சுகளுக்கு இத்தொற்று ஏற்படவில்லை!!! இதன்படி மனிதர்களில் இருந்து பன்றிகளுக்கும், பன்றிகளின் இடையேயும் பரவும் தன்மை உடைய இவ்வைரஸ பன்றிகளில் இருந்து கோழிகளுக்கு தொற்றுவதில்லை என்பது உறுதி செய்யப்பட்ட போதும் பன்றிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து மனிதர்களுக்கு இவ்வைரஸ் பரவுகின்றது எனும கருதுகோளுக்கான சான்றுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. எனவே மனிதர்களில் ஏற்பட்ட இவ்வைரஸ் தாக்கற்திற்கும் பன்றிகளுக்கோ அல்லது வேறு விலங்குக்கோ இடையில் எவ்வித ஊர்ஜிதமான தொடர்புகளைப் பெற முடியாது உள்ளது என்பதே இவ்வாராய்ச்சிக் குழுவின் முடிவாகும்.

எது எவ்வாறு இருப்பினும் தற்போது பன்றி வளர்ப்புப் பண்ணைகளின வருமான வழிகள் யாவும் சரிவடைந்து செல்கின்றமையும், சமகாலத்தில A(H1N1) வைரஸிற்கு எதிரான மருந்து உற்பத்திக் கம்பனிகளின் வருமானம் அடைமழையாகக கொட்டுகின்றமையும் தான் யதார்த்த நிலைமையாகும். பரம்பரை அலகுப் பொறிமுறை மூலமாகத் தற்போது பல புதிய வகை நுண்ணுயிர்களின் வருகை அதிகரித்துள்ளது. பலரின் யூகங்களில தற்போது மையம் கொண்டிருப்பது A(H1N1) வைரஸ் கூட இவ்வாறான பிறப்புரிமை முறையில் மாற்றியமைக்கப்பட்டு உலகில் பரப்பி விடப்பட்டிருக்கும் வல்லரசு நாடுகளின் புதிய உயிரியல் ஆயுதமாக அல்லது ஏழை நாடுகளின் மீது புதிய நோய்க்காரணிகளைப் பரிசோதித்துத் தமது மருந்து விற்பனையை பெருக்கும் உபாயமாக இருக்கலாம் என்பதுதான்?!!

-யோ.மஞ்சுவாணி-

***

## தவறுக்கு வருந்துகிறோம்

கடந்த இதழில் "உலகமயமாதலும் வளர்முக நாடுகளும்" கட்டுரையில் இடம்பெற்ற சி.சிவசேகரத்தின் கவிதையில் காணப்பட்ட எழுத்துப் பிழைகளுக்கு வருந்துகிறோம். அக்கவிதையின் திருத்திய வடிவம்.

நான்வாழும் நெடுமாடித் தொடரினிலே முன்வீட்டில்
வாழ்ந்திருந்த முதியவரும் பலகாலம் நோய்ப்பட்டு
இருந்த கதை முழுதும், இருவாரம் முன்னர் அவர்
இறந்த கதையோடு சாவீட்டு விவரமெல்லாம்
இன்றைக்குத் தானெனக்கு ஈமெயிலில்
சொன்னார்கள்.
உலகம் சுருங்கித்தான் வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னியம், காபோளிக்கின் நெடி அறையெங்கும் வீசியது. சுவரில் தொங்கிய சறிய கடிகாரத்தின் முள் தைரியமற்று நகர்ந்தது. புதியவனின் வருகையின் வியப்பை அது பறைசாற்றியது.

"நான் தயார்" என்றவாறு ஐந்து நிமிடங்கள் கழித்துத் தயாரான நிலையில் வந்தாள் மரியா பெற்றோவ்னா. "நாம் செல்வோம்".

"ஆமாம், நீங்கள் விரைவுபடுத்த வேண்டும்" என்றான் கிர்யாகொவ். "அத்துடன் விசாரிப்பதற்கு இது இடமன்று..... உங்கள் சேவைக்கு நீங்கள் எதிர்பார்க்கும் ஊதியம்?"

"எனக்குத் தெரியாது.." தழுவும் புன்னகையுடன் கூறினாள் மரியா பெற்றோவ்னா. "நீங்கள் தரக்கூடியதைத் தாருங்கள்".

"இல்லை, எனக்கு அதில் உடன்பாடில்லை" கனிவுடனும் உறுதி யுடனும் மருத்துவிச்சியைப் பார்த்துக் கூறினான். "முன்கூட்டியே முடிவெ டுப்பது சிறந்தது. உங்கள் மீது நான் அதிகாரம் எடுக்கத் தேவையில்லை, அவ்வாறே நீங்களும் என் மீது அதிகாரம் எடுக்கத் தேவையில்லை. தவறான புரிந்துணர்வுகளைத் தவிர்த்துக்கொள்ள நாம் முன்கூட்டியே முடிவெடுப்பது சிறந்தது."

"நிச்சயமாக எனக்குத் தெரியாது...... குறிக்கப்பட்ட ஊதியம் எதுவுமில்லை".

"எனது வேலையை நானே செய்வேன், அதேவேளை மற்றவருடைய வேலையை மதித்தும் பழகியவன். அநீதியில் எனக்கு விருப்பமில்லை. உங்களுக்கு நான் குறைந்த பணம் செலுத்துவதிலோ அல்லது நீங்கள் என்னிடத்தில் அதிகம் அறவிடுவதிலோ எனக்கு உடன்பாடில்லை, அதனால்தான் உங்கள் ஊதியத்தைக் கூறுமாறு வற்புறுத்துகிறேன்."

"நான் வேறுபட்ட கட்டணங்களை அறவிடுவேன்".

"உம்ம்ம்.. உங்களது தயக்கத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை, இப்போது நானே உங்களுக்கான ஊதியத்தைக் கூறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன். நான் உங்களுக்கு 2 ரூபிள்கள் தருகிறேன்."

"நன்றி, என் வார்த்தைக்குக் கருணை காட்டியுள்ளீர்" சிவந்த முகத்துடன் திரும்பிய மரியா பெற்றோவ்னா "நான் வெட்கப்படுகிறேன், அந்த 2 ரூபிள்களுக்காக வருவதைவிட நான் இலவசமாகவே வருவேன்..... உனக்கு சம்மதம் என்றால் 5 ரூபிள்கள்".

"2 ரூபிள்கள் தான் அதைவிட அதிகம் தரமுடியாது. உங்கள் மீது அதிகாரம் எடுக்க எனக்கு விருப்பமில்லை, ஆனால் நீங்கள் அதிகம் அறவிடுவதில் எனக்கு எதுவித உத்தேசமுமில்லை".

"ஆனால் நீங்கள் கெஞ்சினாலும என்னால் 2 ரூபிள்களுக்கு வரமுடியாது".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் வரமறுப்பதும் சட்டப்படி தவறில்லை".

"மிக்க நன்று, நான் இலவசமாகவே வருவேன்".

"உங்கள் சேவையை நான இலவசமாகப் பெறமாட்டேன், எந்த ஒரு வேலைக்கும் ஊதியம் வழங்க வேண்டும், எனது வேலையை நானே செய்வேன், எனக்கு அது விளங்குகிறது".

"நான் 2 ரூபிள்களுக்கு வரமாட்டேன்" மரியா பெற்றோவ்னா மெதுவாகக் கூறினாள். "உனக்கு சம்மதம் என்றால் நான் இலவசமாகவே வருவேன்".

"அப்படியென்றால் உங்களை சிரமப்படுத்தியதற்காக மனம வருந்துகிறேன். உங்களை வாழ்த்தி விடைபெறும் கடப்பாடு என கிருக்கிறது".

"நன்று. நீ ஒரு சிறந்த ஆண்மகன்!" என்ற மரியா பெற்றோவ்னா வாசலை நோக்கிச் சென்ற அவனைப் பார்த்து "உன்னைத் திருப்திப் படுத்துமேயென்றால் நான் 3 ரூபிள்களுக்கு வருவேன்."

கிர்யாகொவ் கூர்மையான பார்வையுடன் இரண்டு பூரண நிமிடங்கள் தரையை உற்று நோக்கியவாறு ஆழ்ந்து சந்தித்தான். "இல்லை" என்றவாறு தெருவை நோக்கி நடந்தான்.

ஆச்சரியம்.......... அடைந்த மருத்துவிச்சி கதவைத் தாளிட்டு அறையை நோக்கி நடந்தாள்.

"பார்வைக்கு அழகானவன், மரியாதை தெரிந்தவன் ஆனால எவ்வளவு விசித்திரமானவன்... கடவுள் அவனை ஆசீர்வதிக்கட்டும்...." யோசனையுடன் படுக்கைக்குச் சென்றாள் மருத்துவிச்சி.

அரை மணித்தியாலத்துள் மீண்டும் அழைப்புமணி ஒலித்தது. எழுந்து பார்த்தபோது கிர்யாகொவ் நிற்பதைக் கண்டாள் மருத்துவிச்சி.

"அனைத்தும் அசாதாரணமாகவே இருக்கிறது, ஒரு மருந்தாளருக்கோ போலீசுக்கோ ஒரு மருத்து விச்சியின் விலாசமும் தெரியவில்லை, அதனால நான் உங்கள் நிபந்தனைக்கு உடன்பட வேண்டிய கட்டாயத்திலுள்ளேன். நான் உங்களுக்கு 3 ரூபிள்கள் தருவேன், ஆனால் நான் வீட்டுப் பணியாட்களை வேலைக்கமர்த்தும் போதும் அவர்களிடம் மேலதிக சம்பளம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை உங்களுக்கும் முன்கூட்டியே அறியத்தருகிறேன்".



மரியா பெற்றோவ்னா, கிர்யாகோவின் பேச்சைத் தொடர்ந்தும் கவனிக்க வில்லை. திரும்பத்திரும்ப ஒரே விடயத்தைக் கூறுவதாக உணர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது அளந்து பேசிய வார்த்தைகளைச் சுமையாகவே கருதினாள். அவள மீண்டும் தயாராகி அவனுடன் தெருவில் இறங்கி நடக்கத் தொடங் கினாள்.

காற்று இன்னமும் குளிராகவே வீசியது. வானம் வெறுமையாகவே இருந்தது. தெருவிளக்குகள் மின்னிக் கொண்டிருந்தன.

மருத்துவிச்சி ஆர்வத்துடன் தேடியும ஒரு வாடகை வாகனமும் கண்ணில் தென்படவில்லை.

"அதிக தூரமில்லை என்று எண்ணுகிறேன்" கேட்டாள் மருத்துவிச்சி.
"இல்லை, அதிக தூரமில்லை" கடுமையாகப் பதிலளித்தான் கிரயாகொவ்.

ஒன்று, இரண்டு, மூன்று..... என்று வளைவுகள் தாண்டி நடந்து சென்றனர். கிர்யாகொவ் பெரும் நடை நடந்தான். அவனது அடிகள் மரியாதையையும் நம்பிக்கையையும் பறைசாற்றின.

"என்ன அருமையான வானிலை!" மருத்துவிச்சி அவனை அவ தானித்தாள். ஆனால் அவன் கௌரவமான அமைதி காத்தான். தனது அடிகளை கற்களை விலத்தி வைத்து அந்த அமைதியைக குலைக்காது நடந்தான்.

நெடுந்தூர நடையின் பின் மருத்துவிச்சி அவ்வீட்டு வாசலை அடைந்தாள். நேர்த்தியாக அடுக்கப்பட்ட தளபாடங்களுடன் வரவேற்பறை அவளை வரவேற்றது.

அறைகளில் எந்த ஒரு சீவனையும் காணவில்லை. குறிப்பாக பிரசவத்துக்குத் தயாரான பெண்ணின் அறையில் கூட, வழமையான பிரசவங்களில் பங்கேற்கும் மூதாட்டிகள், உறவுகள் யாரும் இல்லை. சமையற்காரன் பயந்த வெறுமையான முகத்துடன் விரைந்து கொண்டி ருந்தான். ஒரு முனகல் ஒலி உரத்துக்கேட்டது.

மூன்று மணித்தியாலங்கள் கடந்துவிட்டன. மரியா பெற்றோவ்னா படுக்கைக்கு அருகமர்ந்து கர்ப்பிணியின காதோடு பேசிக் கொண்டிருந்தாள். இரு பெண்மணிகளும் நண்பர்களாகுவதற்கு நேரம் போதியதாயிருந்தது. ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்தனர்.

"நீ அதிகம் கதைக்கக் கூடாது" மன நிம்மதியற்றுக் கூறிய மருத்துவிச்சி தொடர்ந்தும் தனது கேள்விகளைத் தொடுத்தாள். கதவைத திறந்தவாறு கிர்யாகொவ் அமைதியாகவும் உறுதியாகவும அறைக்குள நுழைந்தான். கதிரையில் அமர்ந்தவாறே தனது மீசையைத் தடவினான். அமைதி நிலவியது. மரியா பெற்றோவ்னா பயந்தவாறே அவனது உணர்ச்சி யற்ற மரத்த முகத்தை நோக்கிப் பேச்சை ஆரம்பிக்கட்டும் என்று பார்ததாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தொடர்ந்தும் அமைதி காத்துச் சிந்தனையில் ஆழ்ந்தான். காத திருந்த மருத்துவிச்சி தானே பேசத் தீர்மானித்து வழமையான பிரசவங் களில் கூறும் வாசகத்தைக் கூறினாள்.

"நன்று.... இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள், இந்த உலகுக்கு இன்னொரு உயிர் வந்திருக்கிறது".

"ஆம், அது ஒத்துக் கொள்ளக்கூடியது," தனது மரத்த குரலில் கூறினான் கிர்யாகொவ்.

"உண்மை என்னவெனில், அதிக பிள்ளைகளைப் பெற அதிக பணம் வைத்திருக்கவேண்டும், குழந்தை உணவுடனும் ஆடைகளுடனும் பிறப்பதில்லை".

குற்ற உணர்வொன்று தாயின் முகத்தில் தோன்றி மறைந்தது. ஆனாலும் அவள் ஒரு உயிரை அதன் அனுமதியில்லாது இவ்வுலகுக கொண்டுவந்துவிட்டாள். ஒரு பெருமூச்சுடன் எழுந்த கிர்யாகொவ் கௌர வமான நடையுடன் அறையை விட்டு வெளியேறினான்.

"என்ன ஒரு மனிதர், ஆசீர்வாதங்கள்" மருத்துவிச்சி தாயிடம கூறினாள். "அவர் கடுமையானவர், சிரிக்கக்கூடத் தெரியாதவர்".

அவர் எப்பொழுதும் அப்படித்தான் என்று தாயார் மருத்துவிச்சி யிடம் கூறினாள்.

அவர் நேர்மையானவர். நீதியானவர், முன்ஜாக்கிரதையானவர், பொருளாதார விழிப்புணர்வு உள்ளவர், ஆனால அவையாவற்றுக்கும் விதிவிலக்காக சாதாரண இறப்பில்கூட மூச்சுத் திணறவைப்பார். உறவுகள் அவரைப் பிரிந்து சென்றுவிட்டனர். பணியாட்கள் கூட ஒரு மாதத்திற்கு அதிகமாகத் தங்க மாட்டார்கள். அவருக்கு நண்பர்கள் கூட இல்லை.

அவன் மனைவி பிள்ளைகளிடத்தில் கத்துவதோ அடிப்பதோ இல்லை. ஆனால் அவனது குறைபாடுகள் அவனது நல்லவற்றை மறைக் கின்றன. அவன் வீட்டை விட்டு வெளியேறியபின் அனைவரும் நிம்மதி யாக உணர்வர். ஆனால ஏன் அவ்வாறென்று அந்தப் பெண்மணியால் கூறமுடியவில்லை.

"பாத்திரங்களைச் சுத்தமாகக் கழுவ அதற்குரிய இடத்தில் வையுங்கள்" என்றவாறு கிர்யாகொவ் அறைக்குள் நுழைந்தான். "இந்தப போத்தல்களை அப்புறப்படுத்த வேண்டும், கைப்பாவனைக்கு எட்டக கூடாது".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கூறியது சாதாரணமானதும் இலகுவானதும் கூட. ஆனால் ஏதோ சில காரணங்களால் மருத்துவிச்சி அதைக் கூட ஏவல்களாக உணர்ந்தாள். அவனுக்குப் பயப்படவும், அவனது காலடி ஓசை கேட்கும போது திடுக்கிடவும் செய்தாள்.

காலையில் மருத்துவிச்சி புறப்படத தயாராகும்போது கிர்யாகொவின் சிறிய மகனைக் கண்டாள். தலைமுடி ஒட்ட வெட்டிய, வெளிறிய முகத்துடன் பள்ளி செல்லும் சிறுவன், சாப்பாட்டு அறையிலிருந்து தேநீர அருந்திக் கொண்டிருந்தான். கிர்யாகொவ் அவனுக்கு எதிரில் நின்று தனது கரகரப்பான குரலில்....

"உனக்கு எவ்வாறு சாப்பிடுவதென்று தெரியும், அவ்வாறே உன வேலைகளைச் செய்யவும் தெரியவேண்டும். நீ வாய் கொள்ள உண்டு விட்டாய் ஆனால் நீ வாய்கொள்ள உண்டது பணப் பெறுமதி உடையது என்றும், வேலை செய்தே பணமீட்டமுடியும் என்பதையும் அறியத் தவறி விட்டதை. நீ உணர வேண்டும், அதேவேளை அதைப் பிரதிபலிக்கும வகையில் வேலை செய்ய வேண்டும்".

அந்தச் சிறுவனின் வாடிய முகத்தை மருத்துவிச்சி நோக்கினாள். காற்று கனதியாக வீசியது போல் உணர்ந்தாள். சிறிய சுவர்கள் இடிந்து விடும். ஆனால் அந்த சிதைவைத் தடுக்க இந்த மனிதனின் முன்னால் முடியாது.

நடுக்கத்துடன் தனது பொதிகளைக் கட்டியவாறு அங்கிருந்து கிளம்ப விரைந்தாள். அவளது மனம் அந்தக் கொடுமையான மனிதனின மீது வெறுப்பை உணர்ந்தது.

தனது சேவைக்கான 3 ரூபிள்களைப் பெற மறந்து விட்டதை அவள வீடு செல்லும் பாதி வழியில்தான் உணர்ந்தாள். ஒரு நிமடம் நின்று யோசித்தாள். பின் கையை விசுக்கியவாறே தொடர்ந்தும் நடந்தாள்.

இளமாறன்

****

அட்டைப்படம் பற்றிய உங்கள் எண்ணங்களைக் கவிதையாகவோ சிறுகதையாகவோ ஒருபக்கத்திற்கு மேற்படாதவாறு அனுப்பிவைக்கவும். தரமானவை அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HD

HAPPYDINE

"Smile while you dine"

Home Delivery (011) 2367696

حلال
HALAL

No. 31, Hampden Lane, Wellawatte.
Tel: (0) 11- 2367696, 0777 886236 E-mail : afzalijaz@hotmail.com

EC UK City & Guilds UK

APSS INTERNATIONAL Networks (Pvt) Limited
Approved Centre. No: 844022

INTERNATIONAL NETWORKS (PVT) LIMITED.


COURSE DIRECTOR:-
Prof. Dr. K. CHANDIRABOSE

5, Harmers Avenue, Colombo 6.
Tel: 011 2361587 Hotline: 077 3867695
Email: apsseng@yahoo.com

www.apssedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றி அற்புதம்



விரிக பயில்நிலம் என்போம்
வெற்றி அற்புதம் மேன்மை நிச்சயம்
விரிக பயில்நிலம் என்போம்
விரிக பயில்நிலம் என்போம்

எங்கள் ஆடல் பாடல்
இன்பக்கலைகள் தேடல்
சங்கமம் ஆகி இசைந்து கூடல்
சமூகம் வாழ முயன்று வாழல்

விரிக பயில்நிலம் என்போம்
வெற்றி அற்புதம் மேன்மை நிச்சயம்
விரிக விரிக விரிக...

பயில்நிலம் என்பதோர் மன்றம்
பணிபல முயல்கிற இன்பம்
உயர்வு தாழ்வுகள் களைய நாடுதல்
ஒருமை காணுதல் பொதுமை பேணுதல்

விரிக பயில்நிலம் என்போம்
வெற்றி அற்புதம் மேன்மை நிச்சயம்
விரிக விரிக விரிக...

- இ.முருகையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org